81

gd. No. M. 2210 / 181

வருஷ சந்தா ரூ. 1-8-0
தனிப் பிரதி அணா 3

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(Mrs. V. M. PARTHASARATHY IYENGAR)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- FEB 193
MADRAS

ஜகன்மோகினி

JAGANMOHINI

மாதாந்த நாவல் சஞ்சிகை

மலர் 10 | 1933ஆம் ஜனவரி மீ | இதழ் 2.

பத்தாவது ஆண்டுக் கொண்டாட்டம்

50 ரூபாய் பரிசுகள் ஒரு வருஷ சஞ்சிகை இனாம்.

<u>பிரவேசக் கட்டணம் ஒன்றுமில்லை</u>

விவரங்களுக்கு இதனுள்ளிருக்கும்
...ம்பரத்தைக் கவனியுங்கள்

...மாகினி" ஆபீஸ்,
...தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
๑๖21, M24J4
N33·10·2
210038

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதியில் சஞ்சிகை வெளியாகும்

எனக்குப் புத்தி வந்தது

மனைவி.—நான் ஒரு பொருள் கேட்டால்தான் உங்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. நான் எத்தனை நாளைக்குத்தான் நகையில்லா திருப்பேன்? வெளியில் செல்வதற்கே வெட்கமாயிருக்கிறது. முதலில் எனக்குச் சங்கிலி செய்து கொடுத்தால்தான்; இல்லையேல் நான் அதற்கு வேறு வழியில் ஏற்பாடு செய்வேன்.

கணவன்.—அடி துஷ்டே! நான் பன்முறை சொல்லியும் கேளாது நகை, நகை என்று குதித்து என்னிடம் சண்டை செய்கிறாய். வீட்டுச் செலவுக்காகக் கொடுக்கும் ரூபாயை மிகுத்தி சீட்டு திருட்டுத்தனமாகக் கட்டினாயே! அது எனக்குத் தெரியாதென்று நினைத்தாயா! அந்த பணத்தை மோசம் செய்துவிட்ட விவரமும் எனக்குத் தெரியும். பகிரங்கமல்லாத காரியத்திற்கே மோசமும் அபாயமும் நேருகின்றது. இப்போதேனும் புத்தி வந்ததா! இதோ! இந்த கதம்பமாலை என்கிற புத்தகத்தை ஜகன்மோகினி ஆபீஸிலிருந்து உனக்கென்று வாங்கி வந்திருக்கிறேன். இதிலுள்ள ஸரஸராஜன் என்கிற கதையைப் படித்த பிறகாவது உனக்குப் புத்தி வருமா பார்க்கலாம். ஸ்திரீகளினது நகைப்பித்தின் பிடிவாதமும் அதனால் அவர்கள் செய்யும் அக்ரமமும், அதன் மூலம் விளையும் விபரீதமும் கடைசியில் அடையும் பலனும் இக்கதை நன்கு விளக்குகின்றது. இதை முதலில் படித்துவிட்டு வேறு வேலை செய்...................

மனைவி.—நாதா! படித்து முடித்துவிட்டேன். எனக்குப் புத்தி வந்தது. நானும் இந்த தீமைகளையறியாது அத்தகைய அனியாயத்தையே செய்ய விருந்தேன். இனிமேல் நான் இவ்வித காரியத்தில் தலையிடுவதே இல்லை. எனக்கு நகையும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். தங்களது நகை முகம் ஒன்றே எனக்குப் போதும். இத்தனை ஆபத்துக்களா இதில் இருக்கின்றன! போதும் போதும் நகை யாசை. அநேக நீதிகளைப் போதிக்கும் இதர கதைகளையும் அப் புத்தகத்தில் படித்து நற்புத்தியடைந்தேன்.

இந்த அருமையான புத்தகம் "கதம்பமாலை" வேண்டிய சந்தா நேயர்கள் 14 அணா அனுப்பினால் தபால் செலவின்றி புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதரர்களுக்கு விலை ரூ. 1—0—0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-FEB 1933
MADRAS

அந்த வெடிச் சத்தம் அதிகமாக கேட்கக் கேட்க அங்கச்சியம்மாளின் குலே நடுங்க வாரம்பித்தது. அவளுடைய பயமாகிய இருளுக்கு முன்பு பத்து லக்ஷ ரூபாய் புதையல் என்கிற ஆசை ஜோதி பளிச்சென்று நிமிட நேரத்தில் ஆயிரக் கணக்கான மின்னல்கள்போலத் தோன்றி மறைகின்றது. அத்தகைய தோற்றம் உண்டாகும்போது அவள் சற்று தைரியமும் கர்வமும் அடைந்து தன்னே யொருவாறு பார்த்துக் கொண்டாள். எனினும் பயங்கரமான தொனியும், வெடிச் சத்தமும் மீண்டும் அதிகரித்த பீதியையும் கலவரத்தையும் உண்டாக்கி விட்டதால் சகிக்க வியலாத பரம வேதனே யுடன் வண்டிக்குள்ளிருந்தபடி வெளிப்புறத்தில் எட்டிப்பார்த்தாள்.

அந்தகாரமான இருள் சூழ்ந்துள்ள அப்பிரதேசமானது அவளுடைய மனத்தில் எங்குமில்லாத கிலியையும்,நடுக்கலேயும் அடையச் செய்தது. பேசவும் கூடாத நிலைமையை அடைந்து பெருமூச்சு விடுகிருள். மெல்ல தன் தம்பியின் முகத்தை நோக்குகிருள். தம்பியும் அங்கச்சியம்மாளின் முகத்தைப் பார்க்கின்ருன்; கையைப் பிசைகின்ருன்.

இவ் விருவர்களுடைய நிலைமையை அறிந்த குடு குடுப்பைக்காரன் "அம்மா! தாங்கள் ஏதோ பெருத்த கிலி யடைவதாகத் தங்கள் முகத்தில் தோற்றுகின்றது. தாங்கள் ஒருவிதமும் பயப்பட வேண்டாம். இந்த ஓசைகள் யாவும் துப்பாக்கி வெடியோ, அல்லது கள்ளர்கள் வந்து விட்டார்களோ! என்று ஐயுறுகின்றீர்கள். அதை விலக்கி விடுங்கள். கள்ளராவது இவ்விடம் வருவதாவது. இந்த சப்தமெல்லாம் விளேயாட்டுச் சத்தம். இவ்விராக் காலத்தில் பைசாசங்கள், பூதங்கள், காட்டேரிகள், ஜடாமுனிகள், கொள்ளிவாய்ப் பூதங்கள் இவைகளெல்லாம் சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாய்க் களித்து விளேயாடுகின்றன. அவைகள் கையைக் கொட்டும் ஓசை தான் இது. நான் இவ்விடத்தில் பெரிய மந்திரவாதி இருப்பதால்

சிலரிடமிருந்து அவசரத்திற்காகப் பணம் கடன் வாங்கினல் அவர்கள் ஊர் முழுதும் தமுக்கடித்து விடுகிருர்கள். அப்படிப்பட்டவர்களிடம் வாங்குவதை விடக் கொடுக்க வேண்டியவர்களிடமே வாய்தா கேட்டுக் கொள்வது உசிதமானது.

அவைகள் இவ்விடம் அணுகா. நான் இங்கிருப்பதை அவைகள் நன்கு அறியும் பொருட்டே ஒரு ஜபமும் செய்துவிட்டுத்தான் வந்தேன்'' என்று இவன் கூறும்போதே அங்கச்சியம்மாளின் பயம் அதிகரித்தது.

பதில் பேசுவதையும் அறியாது வெளிப்புறம் தற்செயலாகப் பார்த்தாள். நெருப்பை குப்பு, குப்பு என்று கக்குவதுபோல ஓர் ப்ரகாசம் தெரிந்தது. அதைக் கண்டு அங்கச்சியம்மாள் அலறிவிட்டாள். கொள்ளிவாய்ப் பைசாசமென்று கேள்வியுற்றிருக்கிருளேயன்றிப் பார்த்ததில்லை யாதலால் இந்த பூதத்தைப் பார்த்ததும் தலை கிறு கிறு என்று சுற்றிச் சாய்ந்து விட்டாள்.

இதைக் கண்ட குடு குடுப்பைக்காரன் புதையலின் ஆசையை பலப்படுத்திக் கூறி அவளுடைய பயத்தைப் போக்கினான். தேறுதல் மொழிகளைக் கூறிக்கொண்டே அவர்கள் ஒரு இடத்தை யடைந்தார்கள். வண்டியும் உடனே நின்றது. குடு குடுப்பைக்காரன் வெகு வணக்கத்தோடு பேசத் தொடங்கி 'அம்மணீ! இதோ தெரியும் இடந்தான் புதையல் உள்ள இடம். அங்கு சண்டையிடும் பூதங்களைப் பார்த்து பயப்படாதீர்கள்.'' என்றான்.

அங்கச்சியம்மாளுக்கு கீழே இறங்குவதற்கும் பயம் நடுக்குகின்றது. பைசாசங்களின் கூட்டத்தைக் கண்ணால் கண்டதும் "ஹா!'' என்று பெருத்த சத்தமிட்டு விட்டாள். ஒவ்வொரு உருவமும் ஆகாயத்தை யளாவும் உயரம் காணப்படுகின்றது. முகங்களின் விகாரமோ சொல்லக் கூடவில்லை. பயங்கரமான தொனியில் ஒன்றேடொன்று உரையாடுகின்றன.

பூதம்:—அண்ணே! ஜடா முனீ! இண்ணைக்கி சரியான இரை அம்பிட்டுச்சடா! மூணு ஆளே முந்திரிப் பழம் போலே முழுங்கிப் புட்டேன். ஹா! ஹீ! ஹா. ஹீ...தன்னானே! தானெனன்னே! தில்

சிலர் எந்த காரியத்தையும் அவ்வப்பொழுது செய்யாமல் விட்டு விட்டுக் கடைசி நேரத்தில் ஆரம்பித்து அவசரத்தில் அரை குறையாகச் செய்து அவஸ்தைப் படுவதுடன் மற்றவர்களுக்கும் அசௌகரியத்தை விளைவிக்கிறார்கள். ஒழுங்காகச் செய்தால் எல்லோருக்கும் சுகமல்லவா?

லாலே தில்லாலெ லெ லெ லெ! திம்; தகிட. திம். திம். திம். தத் தோம். தித்தீம்.

காட்டேரி:—ஏலேலோ! எலேலோ! எலேலே! ஹா! ஹா! ஏலேலே புதையல் ஹா! தளாங்கு தக்கதோம். எனக்குத்தான் அண்ணே புதையல்...ஹோ! ஹோ! ஹோ! திம் திம்.

பைசாசு:—ஹஹஹா! புதையலா ஒணம். ஓ! காட்டேரி! அந்த ஆசெ வாணும்; குத்துவேன். வெட்டுவேன். கும்ம கும்ம குடுப்பேன். ஆ! ஹீ. 10 ஆடு முயுங்கின பேச்சா! தக தக தக தக தக தக. தோம். தோம்.

ஜடாமுனி:—அடேய் பயங்களா! பேசாதீங்கோ! நம்ப வவுத்திலே இன்னிக்கு ஒரு பெரிய யானெ, 4 புலி, 5 கரடி, 10 பன்னி எல்லாம் உயிந்திச்சு. ஜோக்கு மேலே ஜோக்கு. நாக்கு மேலே மூக்கு. ததிங்கிணதோம் தோம் தத்தத்தத்த. ஜணுதம். திமிதம்.. புதையல் எனக்குத்தான் சொந்தம். அதை மறந்தூட்டிங்களா! ஹோ! செத்தீங்கோ! போனீங்கோ!.

என்று மேற்குறித்தவாறெல்லாம் பேசிக்கொண்டும், கூத்தாடி கைகொட்டி கோஷம் செய்து கொண்டும் இருந்தன. அந்த அட்டகாஸத்தையும், பயங்கர உருவங்களையும் பார்த்த அங்கச்சியம்மாள் ஸ்மரணையற்ருள் என்றே கூறவேண்டும். வண்டியில் ஒரு மூலையில் பதுங்கியதுபோலப் புகுந்து கொண்டாள்.

குடுகுடுப்பைக்காரன் வெகு தைரியமாகக் கீழே இறங்கினன். தன் போக்காகக் கூத்தாடும் பைசாசங்களின் கூட்டத்தின்மீது ஒரு கை விபூதியை வாரி இரைத்து "ஏ! பைசாசங்களா! பூதங்களா! உங்களுடைய ஆட்டத்தை நிறுத்திப் புதரில் பதுங்குங்கள். இல்லெ

உரத்த குரலில் வெகு அட்டகாசமாகப் பேசி விட்டால் தங்கள் பக்கம் தான் நியாயமென்று கேட்போர் நினைத்துக்கொள்வார்களென்று சிலர் நினைக்கிருர்கள். ஆனல் மற்றும் சிலர் எப்பொழுதும் நிதானமாக சாந்தத்துடன் பேசினல் முடிவில் தங்களுக்கே அனுகூலமென்பதை உணர்ந்து நடந்துகொள்கிருர்கள்.

அ10038 ... 000 008

பேல் மந்திரத்தினால் கட்டி விடுவேன். போங்கள். உங்களுக்குச் செய்யவேண்டிய பூசையைப் பிறகு செய்கிறேன்." என்று கர்ஜித்தான்.

இதுகேட்ட பைசாசங்கள் ஆட்டத்தை நிறுத்திவிட்டு, "அடேய்! குடுகுடுபாண்டி! எங்களை ஏமாத்திவிட்டுப் புதையலை அமுக்கிவிட எண்ணுகிறாயா! உன் மந்திரத்தைக் கொள்ளி வாயால் எரித்து விடுவேன். ஹோ! ஹா! விட மாட்டோம் புதையலை விட மாட்டோம். அடே குடுகுடுபாண்டி! இப்போது எங்கேடா வந்தாய்! சொல்லடா! வண்டிக்குள்ளே அழகான பெண்ணை மறைத்திருக்கிறாயா?" என்று ஆரவாரம் செய்தன.

இதுகேட்ட குடுகுடுபாண்டியும் சற்று பயந்து நின்றான். அங்கச்சியம்மாளுக்குப் பின்னும் பயம் மூண்டுவிட்டது. பேச்சுமூச்சின்றி உட்கார்ந்திருக்கிறாள். குடுகுடுப்பைக்காரன் மீண்டும் பேசத் தொடங்கி, "ஏ பூதங்களே! நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை மறக்கமாட்டேன். இன்று இந்தப் புதையலை இச் சீமாட்டிக்குக் காண்பிக்க வேண்டி அழைத்து வந்தேன். நீங்கள் சற்று விலகிக் கொள்ளுங்கள். நான் புதையலைக் காட்டிய பிறகு, உங்களுக்கு வேண்டிய அளவு பூசை போடுகிறேன். இது சத்தியம். சத்தியம். சத்தியம்." என்று சபதம் செய்து ஏதோ மந்திரம் ஜபித்தான். உடனே பூதங்கள் சற்று விலகிக் கொண்டன. அவன் அங்கச்சியம்மாளைப் பார்த்து "அம்மா! இறங்கி வாருங்கள். பயப்படாதீர்கள். இதோ இந்த விபூதியைத் தூவுங்கள்" என்று கூறி விபூதியை நீட்டினான்.

அங்கச்சியம்மாளுக்கு அதைப் பெற்றுக் கொள்வதற்கும் பயமாயிருக்கிறது. புதையலின் ஆசை யொருபுறம் ஆடுவதால் சற்று யோசித்து விபூதியைக் கையில் வாங்கிக் கொண்டாள். பயம் நடுங்கியவாறு அதை அந்த பூதங்கள் இருக்கும் பக்கத்தில் வீசி எறிந்

வினா:—"எதிர் வீட்டில் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்களே அங்கு என்ன விசேஷம் தெரியுமா?" என்று இவ்வளவு அக்கரையாய்க் கேட்கிறாயே! என்ன?

தாள். அதே க்ஷணத்தில் பூதங்கள் "ஹா!" என்று கதறிக் கொண்டு ஓடி விட்டன.

உடனே குடுகுடுப்பைக்காரன் அந்த புதையலிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று அவ்விடத்தில் பள்ளம் வெட்டி நான்கு அடி ஆழம் தோண்டிய பிறகு ஒரு பெரிய தவலையைக் கண்டுபிடித்தான். "அம்மா! இதோ! பாருங்கள். பெரிய தவலை தெரிகின்றது. பயப்படாமல் இந்த பள்ளத்தில் இறங்கி அதை உங்கள் மன த்ருப்தியாகப் பாருங்கள்" என்று கூறியவாறு தவலையின் மூடியைத் தள்ளி விட்டான். அந்த மூடியை விலக்கிய உடனே கண்களைப் பறித்துவிடும் வண்ணம் தகத்தகாயமாய் மின்னும் சொர்ணத்தை அங்கச்சியம்மாள் கண்டதுதான் தாமதம் தன்னையே மறந்து கூத்தாடினாள். அதற்குமுன் பைசாசங்களைக் கண்ட பயமும் மறைந்து விட்டது. அபாரமான ஆவேசத்தோடு அந்த தவலையில் கையை வைத்துச் சவரனை எடுத்தாள்.

அதே நிமிடத்தில் அங்குள்ள பூதங்கள் எல்லாம் ஏக காலத்தில் "ஹோ!" என்று கத்தி பெருஞ் சத்தமிட்ட வண்ணம் ஓடிவந்தன. தவலைக்குள்ளிருந்து சுளீர் என்று தேள் கொட்டிவிட்டது. ஏக காலத்தில் இந்த இரண்டு சம்பவங்களும் அங்கச்சியம்மாளை அலறச் செய்துவிட்டன. அவள் நடு நடுங்கி விட்டாள். உடனே குடுகுடுப்பைக்காரன் "அம்மணி! அவசரப்படுகிறீர்களே! இந்த தவலையிலுள்ள புதையல் யாவும் தங்களுடையதே என்பதில் இனிச் சந்தேகம் உண்டா! இதற்குள் கையை வைத்து விட்டீர்களே! பயப்படாதீர்கள். இந்த விபூதியை மீண்டும் போடுங்கள். கையில் தேள் கொட்டிய இடத்தில் இதைத் தேய்த்தால் சரியாகி விடும்" என்று கூறி அளித்தான். அங்கச்சியம்மாளும் அதே மாதிரி செய்தாள். ஆனால் தேள் கொட்டிய நோய் தீரவில்லை. அதை மெல்ல பொறுத்துக் கொண்டு "அப்பா! குடுகுடுப்பைக்காரா! நான் இது வரையில்

விடை:—மேளம், தாளம் என்று பேசியது காதில் விழுந்தது. கல்யாணம் ஏதேனும் இருக்குமோ! அப்படியாயின் இன்றே எண்ணெய் சாப்பிடலாகுமா, வயிறு காலியாகுமே என்று கேட்டேன்.

பூதம், பிசாசு என்றால் நம்பாமல் ஏதோ அலக்ஷியமாகவிருப்பேன். இன்றுதான் அதன் உண்மையை அறிந்தேன். ஹா! தேள் கொட்டிய வலி மிகவும் அதிகமாகவிருக்கிறது. ஏ! பூதங்களே! பைசாசங்களே! உங்களுக்கு என்னென்ன பூசைகள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்துவிட்டுப் பிறகு நான் இப் புதையலை யடைகின்றேன். எனக்கு நீங்கள் யாதொரு கெடுதியும் செய்யாமல் காப்பாற்ற வேண்டும்; உதவி புரிய வேண்டும். உங்களையே நான் நம்பி இருக்கிறேன்'' என்று வாய் குளறக் கூறினாள்.

தவலை நிறைய உள்ள சொர்ணத்தைப் பார்த்ததும் அங்கச்சியம்மாளின் தம்பிக்கு அடங்காத சந்தோஷம் உண்டாகிவிட்டது. அன்று தனக்குத்தான் புதையல் அகப்பட்டது போல எண்ணி அவன் அபாரமாய் அகமகிழ்ந்தான். அங்கச்சியம்மாள் வேண்டிக் கொண்டது போலவே தானும் பூதங்களைக் கண்டு ப்ரமாதமாய் வேண்டினான்.

இவைகளைக் கண்ட பூதங்கள் மிக்க களிப்புடன் ஆரவாரம் செய்துகொண்டு "ஹா! பூசையைப் போடுகிறாயா! படையல் படைக்கிறாயா! சொன்னப் பேச்சு நிசந்தானா! அடேய் குடுகுடுபாண்டீ! அவங்க ரண்டு பேரையும் கன்னத்தில் போட்டுக்கொண்டு தோப்பக்கர்ணம் போட்டு நமஸ்காரம் வைக்கச் சொல்லடா! இல்லாப்பூட்டா நீ செத்துப்பூடுவே! பத்திரம்'' என்று உறுமின.

உடனே அங்கச்சியம்மாளும் அவள் சகோதரனும் கன்னத்தில் பளபளவென்று பல அறைகள் அறைந்துகொண்டு அனேக நமஸ்காரங்களைச் செய்து "ஏ பூதங்களே! நாங்கள் பொய் சொல்லவில்லை. உங்களிஷ்டப்படி எல்லாம் செய்கிறோம்.'' என்று கூறி

கல்யாண வீட்டில் சிலர் உடை தரித்துக் கொள்ளத் தனி விடுதி வேண்டுமென்று ஒரு அறையில் நுழைந்து உடை தரித்து வருகிறார்கள். பிறகு அவ் விடுதியில் சென்று பார்த்தால் அங்கு இருந்த பக்ஷணம் பாதி காலியாயிருக்கும் ஆச்சரியம் தெரிகின்றது. தனி விடுதி கேட்டது இதற்குத்தான் போலும்.

னார்கள். குடுகுடுப்பைக்காரனும் அதையே செய்தான். பிறகு பூதங்கள் தமது சந்தோஷத்தைக் காட்டி குதித்து நாட்டியமாடிக் கரகோஷம் செய்தன.

குடுகுடுப்பைக்காரன் இவர்களை அழைத்துக்கொண்டு திரும்பலானான். அங்கச்சியம்மாளுக்கு அங்கு வரும்போது இருந்த அவ்வளவு பயம் இல்லை. புதையலைத் தன்னிரு கண்களினாலும் பார்த்துக் கரத்தினால் தொட்ட ஆநந்தமே அவளுடைய மனத்தைக் கப்பிக்கொண்டது. அந்த நிலைமையோடு வருகையில் இருள் நிறைந்த அக் காட்டில் பேரிரைச்சலோடு சில குரல்கள் ஒன்றுகூடி "நிறுத்து வண்டியை. ஓட்டினால் செத்தாய்! நிறுத்து. நிறுத்து" என்று கூறியவாறு, கற்களை எடுத்து டப்பு, டிப்பு என்று வண்டியின்மேல் எறிந்து சிலர் வழியை மறைத்தார்கள்.

வண்டியோட்டி இச்சம்பவத்தினால் நடுநடுங்கிப் போய் கைகள் தடுமாற வண்டியை நிறுத்திவிட்டான். இதுபரியந்தம் ஆகாயக் கோட்டையில் அகமகிழ்ந்து கொண்டிருந்த அங்கச்சியம்மாள் அச்செய்தி அறிந்த உடனே அலற் ஜன்னி கண்டவளைப் போல "ஹா! இதென்ன ஆபத்து!" என்று நடுநடுங்கினாள். பூதங்கள்தான் இங்கும் மிரட்டுகின்றன என்று எண்ணி பூதங்களைக் குறித்து வேண்டலானாள்.

இதற்குள் வழிபறிக் கொள்ளைக்காரர்களாகிய தீவற்றிக் கள்ளர்கள் அனேகர் அங்கு சூழ்ந்துவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு தீவட்டியைக் கொளுத்திக்கொண்டு அட்டகாஸத்துடன் "ஏ பசங்களா! ஏ பொம்பிள்ளே! உம். பதில் பேசாமல் உன் தாலி குண்டு உள்பட எல்லாவற்றையும் கழற்றி வைக்கிறாயா? அல்லது உன்னை எங்கள் குகைக்குக் கொண்டுபோய் கல்யாணம் செய்து கொள்ளட்டுமா? உம். கழட்டு. அடேய் பயல்களே!

என் கண்ணே! கண்மணியே! உன்னை மறந்தும் உயிர் தரிப்பனோ. என் கலி தீர்க்க வந்த கற்பகத் தருவன்றோ!" என்று கூறிய வாயே பின்னும் சில காலத்திற்குப் பின்னர் "இச்சி! மூதேவியே! வெளியே செல்" என்றதாம் ஓர் ப்ரபுவின் காருண்யம்.

உங்களிடம் உள்ள கோவணம் நீங்கலாக மற்றதை வைத்து விடுங்கள். இல்லையேல் தீவட்டிக்கு இரையாகி விடுவீர்கள். ஏ குள்ளா! இந்த ரெண்டு தடியன்களையும் பிடித்துக் கீழே தள்ளடா! ஏ வண்டியோட்டி! உனக்குந்தான் அந்தச் சொல்லு.'' என்று அதட்ட, ஒருவன் கைத்துப்பாக்கியை அவனது முகத்திற்கு நேர் நீட்டினன்.

எல்லோருடைய நிலைமையையும் விவரித்தல் எங்ஙனம்? ஊகித்தறிதலே நலம். ஒவ்வொருவருடைய முகமும் வெளுத்தது. சப்த நாடிகளும் அடங்கி விட்டன. அங்கச்சியம்மாளுக்குத் தன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவதாகச் சொல்லிய கடுஞ்சொல் நெஞ்சைப் பிளந்து இருதயத்தைத் துளைக்கின்றது. ஆபரணங்கள் எல்லாம் போய்விடினும் புதையல் பெரிய கடல்போலக் கிடைக்க விருக்கின்றது. அதில் செய்து கொள்ளலாம். இந்த சமயம் தான் கற்புடன் பிழைத்தால் போதும் என்கிற பெரும் பயம் தோன்றிவிட்டது. ஆதலால் தன் தேகத்திலுள்ள ஆபரணங்கள் எல்லாவற்றையும் ஒன்று விடாது கழற்றி "அப்பா! இதோ வைத்துவிட்டேன். இதோடு எங்களை ஒன்றும் செய்யாது விட்டு விடு'' என்று கெஞ்சி வேண்டினள்.

குடுகுடுபாண்டி இத்தகைய ஆபத்து நேருமென்று நினைக்கவில்லை யாதலால் அவன் கண்ணீர் விட்டுக்கொண்டே தன் மடியில் வைத்திருந்த பையை அப்படியே கீழே வைத்துவிட்டு துணிமணிகளையும் வைத்துக் கோவணதாரியாக நின்றுவிட்டான். அங்கச்சியம்மாளின் சகோதரனும் அதே கதியானன். வண்டியோட்டியிடம் காசு ஏதுமே இல்லையாதலால் அவன் அதை யுரைத்தும் அம் முரடர்கள் அவ்வார்த்தையைக் கேளாது வண்டியோட்டியை இழுத்துத் தள்ளி அவனை நன்முக உதைத்து நிஜார் சொக்காய் முதலியவற்றைக் கிழித்து இம்சை செய்துவிட்டார்கள்.

நாம் உலகிலுள்ள மனிதர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கையில் வெறுப்பும் விரக்தியும் ஏற்படுகின்றது. ஆனல் மறு நிமிடமே எல்லாவற்றையும் மறந்து மாயை யெனும் கடலில் மூழ்கித் தவிக்கிரேம்.

அங்கச்சியம்மாள் கட்டியிருக்கும் விலையுயர்ந்த சேலையை வாங்கிக் கொண்டு, ஓர் பழைய கந்த அநாகரிக சேலையைக் கொடுத்துக் கட்டிக் கச் செய்தார்கள்.

அச் சேலையின் துர்வாடையும், அசங்கியமும் அபாரமான அருவருப்பை அங்கச்சியம்மாளுக்கு உண்டாக்கி விட்டன. தலை விதியே என்று அதைச் சுற்றிக்கொண்டாள். கொள்ளை யிட வேண்டிய பொருள்களை பறித்துக்கொண்டு 'இனிமேல் நீங்கள் போகலாம்' என்று கூறி அங்கச்சியம்மாள் நீங்கலாக மூவரையும் தம் கை ஜாட்டியினல் சுளீர், சுளீர் என்று அடித்துப் பின்னர் அவர்கள் ஓடிவிட்டார்கள்.

எமன் கையிலிருந்து விடுபட்ட உயிரைப் போல இவர்கள் மட்டும் மிகுந்தார்கள். வண்டியோட்டிக்குப் பலமான அடிபட்டு விட்டதால் அவனால் வண்டியை ஓட்ட முடியாமல் சோர்ந்து விட்டான். நேரமோ ஆய்விட்டது. இந்த விடத்தை விட்டு சீக்கிரம் போகாவிடில் இன்னும் என்ன ஆபத்து நேருமோ என்று மனத்தில் திகில் உதைப்பதால் எல்லோரும் தவித்தவாறு வண்டியோட்டியை வேண்டினார்கள். மெல்ல வண்டியும் நகர்ந்து செல்லலாயிற்று.

விடியற்காலம் மூன்று மணிக்குமேலாகிவிட்டது. அப்போதுதான் வண்டி அங்கச்சியம்மாளின் வீட்டுத் தோட்டத்தில் வந்து நின்றது. அங்கச்சியம்மாளுக்கோ குலை நடுங்குகின்றது. தான் கால் முதல் தலை வரையில் அணிந்திருந்த ஆபரணங்கள் ஒன்றுமில்லாது இந்த கந்தத்துணி வேஷத்துடன் எவ்வாறு தன் புருஷன் முன் செல்வது. என்ற பயம் கலக்குகின்றது. அதோடு சின்ன குழந்தையை விட்டு வந்துவிட்டோமே! அது என்ன கத்துகின்றதோ! புருஷனுக்குத் தான் வீட்டிலில்லாதது தெரிந்து விட்டதோ! என்கிறது போன்ற கவலைகள் வதைக்கின்றன.

சில பெரிய மனிதர்கள் ஒரு தடவைக்குப் பல தடவைகள் வி. பி. யிலேயே அனுப்பும்படி எழுதுவது; பிறகு அதைத் திருப்பி விடுவது. இதனால் மற்றவர்களுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதுடன் தமது கௌரவம் குலைந்து விடுகிறதே யென்பதைக் கருதுவதில்லை.

"உனது ஆபரணங்கள் எங்கே?" என்று தன் கணவன் கேட்டால் என்ன சொல்வது?" என்று சற்று யோசித்தாள்.

அவளுக்கு சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. அதாவது,--தான் தேகபாதைநிமித்தம்தோட்டத்திற்கு வந்ததாயும். அப்போது யாரோ கள்ளன் வந்து தன்னுடைய ஆபரணங்களைக் களவாடிக்கொண்டு தன்னை இவ்வாறு உருட்டிவிட்டதாயும் ஒரு கட்டுக் கதையைக் கூற எண்ணி அதற்குச் சரியானபடி ஜோடிப்பதற்கு வழி செய்து விட்டாள். தன்னை மட்டும் ஒரு மரத்தடியில் கட்டிப் போட்டுவிட்டு, புறக்கடைச் சுவற்றில் கொஞ்சம் இடித்து விட்டுக் கதவைத் திறந்துகொள்ளும்படியாக வழி செய்துவிட்டுத் தன் தம்பி முதலியவர்களை அவ்விடம் விட்டு ஓடிவிடும்படியாகத் திட்டம் செய்துவிட்டாள்.

இது கேட்ட அவள் தம்பி இதுதான் சமயம் என்று எண்ணி "அக்கா! நீ சொல்லும் வகை எல்லாம் நான் செய்கிறேன். எனக்கு தற்போது ஒரு வாரண்டு தயாராகக் காத்திருக்கிறது. அதற்காக நான் தலைமறைந்தே திரிகின்றேன். எனது வாரண்டு பணத்தைக் கட்டிவிட்டால் நான் பகிரங்கமாய் தாராளமாக உலாவலாம். புதையல் விஷயமான வேலைகளைச் செய்யலாம். ஆதலால் எனக்கு நாளைய தினம் எப்படியாவது 500 ரூபாய் கொடுத்தால் நான் இந்த ரகசியத்தை யாருடனும் வெளியிடாதிருக்கிறேன். இல்லையேல் முதலில் உன் புருஷனிடமே சொல்லிவிடுவேன். என்ன சொல்கிறாய்?" என்றான்.

அங்க :—அப்பா! உனக்குக் கேட்க இதுவா சமயம். பிறகு பார்த்துக்கொள்வோமே!—என்றாள். எனினும் தன்னுடைய இச் சமயத்தையும் ரகசியத்தையும் உத்தேசித்து தான் தப்பும் பொருட்டு "ஆகா! ஆகட்டும்" என்று இசைந்தாள்.

நமக்குப் பணம் கொடுக்க வேண்டியவர்கள் ஒரு குறிப்பிட்ட தேதியில் கொடுக்கிறேனென்றதை நம்பி, நாம் ஒருவருக்கு வாக்குக் கொடுக்கிறோம். அவர்கள் அதை ஆதாரமாகக் கொண்டு வேறொருவருக்கு வாய்தா

பிறகு அவளை ஓர் மரத்தில் கட்டிவிட்டு, நாம் முற்கூறிய படியே செய்துவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள். அங்கச்சியம்மாள் புதையல் ஆசையை எண்ணியும், தற்போதுள்ள ஆபத்தை நினைத்தும் விதியே என்று மரத்தடியில் கிடக்கின்றாள். மாடியில் விளக்கெரிவது ஜன்னல் வழியாகத் தெரிகின்றது. இரண்டு குழந்தைகள் கத்துகின்றன. அதுவும் காதில் கேட்கின்றது. தன் புருஷன் என்ன செய்வானோ என்கிற பயத்துடன், தான் கத்திச் சத்தமிடும் பாவனையாக "ஐயோ! ஆபத்து! ஆபத்து! ஒருவரும் இல்லையா? யாரும் இல்லையா! கள்ளன்! கள்ளன்! என்று ஹீன சுரமாகக் கூச்சலிட்டாள். கயிறு இறுக்கிக் கட்டியிருக்கும் வேதனையைச் சகிக்கக் கூடவில்லை. தத்தளித்தவாறு உட்கார்ந்திருக்கிறாள். கணவனே கடவுள் என்ற வாக்கை மறந்து, அவனுக்குத் துரோகம் செய்ய எண்ணியதின் பலன் இது என்பதை அங்கச்சியம்மாள் இன்னும் உணரவில்லை.

3-வது அதிகாரம்

அன்பிற்கு முன்பு அனைத்தும் மறையும்

பயங்கரமான தொனியைக் கேட்டு இளம் மான் போல மருண்டு, நடுங்கிப் பதறி எழுந்த திலகவதியின் உயிர் பாதிக்குமேல் நீங்கி விட்டதென்றே கூறலாம். ஆகாயம், பூமி இரண்டும் ஒன்றாகி விட்டதுபோலானதாய் அவள் விழிக்கின்றாள். சுகுமாரனும் முதலில் நடு நடுங்கி விட்டான்; எனினும் தன்னைச் சமாதானம் செய்துகொண்டு திலகவதியை ஒரு கரத்தினால் அணைத்து, மற்றொரு கரத்தினால் அவளுடைய அம்ருத

வைக்கிறார்கள். கடைசியில் முதலில் கொடுப்பதாகச் சொன்னவர்கள் தவணை தவறிவிடின் மற்றவர்கள் கஷ்டப்பட்டு நஷ்டமடைவதுடன் வீண் மனஸ்தாபமும் நேரிடுகின்றது.

கலசம் போன்ற வாயின் அடி பீடமாகிய மோவாயைப் பிடித்துக் கொண்டு "கண்மணீ! திலகவதீ! பயப்படாதே! முதலில் நீ தைரி யத்தை இழக்கலாகாது. தைரிய லக்ஷ்மியை ஆச்ரயித்து அடைந் தால் பிறகு ஜெயலக்ஷ்மியை அடையலாம். என் அன்பே! நீ வீணுக அதைரியப்படாதே! நான் என்னுயிரைக் கொடுத்தேனும் உன்னைக் காப்பாற்றுவேன் என்பதைக் கனவிலும் மறவாதே! ஐயோ! ஏன் இப்படி உன் சரீரம் நடுக்கலுற்று ஆடுகின்றது. கண்ணே! வேண் டாம்; பயப்படவேண்டாம்! இப்படி உட்காரு." என்றுதேற்றினன்.

திலக:—(அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு) ஐயோ! நான் என் செய்வேன்? என்னுடைய நிலைமையைத் தாங்கள் முற்றும் அறிய மாட்டீர்கள். நான் பைசாசங்களின் மத்தியில் இருக்கின் றேன். இந்த நிலைமையை விட ஆபத்து வேறு யாது வேண்டும்? என்னல் தங்களுக்குமன்றோ துன்பம் நேரிடும். என் மனம் தத்த ளிக்கின்றதே! நான் எவ்விதம் செல்வேன்?

சுகுமா:—என் ப்ரேமாமணீ! எனக்குத் துன்பம் வருவதைப் பற்றி நான் பொருட் செய்யவில்லை. என் பிராணனுக்கு ஆதார மாகிய உனது இடரைக் களைந்து உன்னை இன்புறச் செய்வதுதான் எனது முதல் கடமை. கண்ணே! இவ்விரண்டு வருட காலமாக என் புறக் கண்ணில் படாது அகக் கோட்டையில் அமர்ந்து என்னை அலையச் செய்திருந்த காலத்தில் உன்னை எண்ணி நான் உன் னிருப்பிடம் தேடிப் பிடிக்க என்ன பாடு பட்டிருப்பேன் தெரி யுமா! உண்ணும் போதும், உலாவும் போதும், உறங்கும் போதும் உன்னுடைய எழில் நிறைந்த—அன்பே உருவமான—முகத்தை நோக்கியவாறே என் காலத்தைக் கடத்துகின்றேன். காதலீ! அஞ் சாதே; கண்ணீர் விடாதே. இதோ இந்தப் பக்கமுள்ள கதவைத் திறந்து கொண்டு நீ வீட்டுக்குச் சென்று விடு. நீ வீடு போய்ச் சேரும் வரையில் அவ் வேலைக்காரனை இவ்விடமே மடக்கிப் போட்

சில வேலைக்காரர்கள் ஒரு நாள் கழிந்தால் கூலி வருகிறதே யென் கிறதொன்றை மாத்திரம் கவனிக்கிறர்களே யன்றி தங்களது வேலை ஒழுங்காகவும் வார்த்தைக்கிடமில்லாமலுமிருக்க வேண்டுமே யென்பதைக் கவனிப்பதில்லை.

[பக்கம் 64]

டுப் பின்னர் அனுப்புகிறேன். கண்ணே! நாளை வருகின்றாயா! நாளை கட்டாயம் உன்னைச் சந்திக்காவிடின் என்னுவி தத்தளிக்கும். என்ன மௌனம் சாதிக்கின்றாய்?

திலக:—அன்பா! நான் என்ன விதமான பதில் சொல்வேன்? நாளை என்னுடைய நிலைமையை எவ்வாறு கடவுள் வைப்பாரோ. நான் அல்லல் அடைந்து அலைவதற்கே பிறந்தேன். இன்று நேர்ந்துள்ள ஆபத்தினின்று நான் எவ்வாறு தப்புவேனோ தெரியவில்லை. தாங்கள் ஆண்பிள்ளையாதலால் வாய் விட்டுக் கூறுகின்றீர்கள். நானோ பெண் பேதை! அதிலும் திக்கற்ற அனாதை! பல விதத்திலும் இம்சையுறவே ஜனித்த பாவி யாகையினால் என் மனோ நிலைமையை நான் எங்ஙனம் வெளி யிடுவேன்? என்னுடைய இருதயத்தின் இரகசியத்தை அந்த ஹ்ருதய கமல வாஸனே அறிவான். நாளைய விஷயத்தை நான் எவ்வாறு பதில் உரைப்பேன்? என்னால் கூடிய வரையில் எவ்விதமேனும் சந்திக்க வழி செய்கிறேன். இல்லையேல் அதைக் குறித்து வருத்தமுற வேண்டாம். கவலை கொண்டு ஏங்க வேண்டாம். அதோடாவது என்னை மறந்து விடுங்கள். பிறகு நம் விதிபோ லாகின்றது.

சுகுமா:—(கண்ணீர் பெருகியவாறு) ஹா! கண்ணே! இச் சமயம் எனக்கு பம்பாய் ஹோட்டல் நினைவிற்கு வருகிறதே! நான் என்ன செய்வேன்? நீ மீண்டும் மீண்டும் என்னை மறக்கும்படியாகவே கூறுகின்றாயே! இச் சொல்லைக் கேட்கும்போது என்னுடைய இருதயம் எவ்வாறுள்ளது தெரியுமா! நானா உன்னை மறப்பது! முடியாது; முடியாது; ஒருபோதும் முடியாது. என்னுயிரை நான் மறக்கையில் உன்னையும் மறப்பேன். இனி அம் மொழியைக் கூறாதே. நான் உன்னை மறந்தால்தான் நீ சுகப்படுவாய் என்ற நிபந்தனை இருக்கும் பக்ஷத்தில் நான் உன்னை மறந்துவிட்டதாக நீ எண்ணி பாவித்துக் கொள். மற்றபடி நான் பதில் பேச அதிக அசக்தனாகி யிருக்கிறேன்.

ஒருவருக்கு நியாயமாகச் சேரவேண்டியதை விடக் கொஞ்சம் அதிகமாகவே கொடுக்கிறோமென்று சொன்னால் அவர்கள் இன்னும் அதிகம் வேண்டுமென்று பேரம்பேசுகிறார்கள். முதலிலேயே நாம் குறைத்துக் கூறி

திலக:—ஐயோ! இதென்ன வார்த்தை! புலம்ப வேண்டாம். எனக்கு இப் பிறவியில் சுகமா! அதிலும் தங்களைப் பிரிந்து மறந்த பின்னர் சுகமா! ஐயோ! அவ்வாறு எண்ண வேண்டாம். ஹா! அவன் கூப்பிடும் ஒவ்வொரு குரலும் என் உயிரைக் கொல்கின்றதே! நான் சென்று வருகிறேன். விடுங்கள்.

சுகுமா:—கண்மணீ! நான் நாளை எங்கே, எவ்விதம் உன்னை சந்திப்பது என்பதைக் கூறிவிட்டுத்தான் நீ போக வேண்டும். அவ் வேலைக்காரன் உள்ளே வர முடியாது; பயப்படாதே! என்னுடைய நாய் குலைக்கின்றது பார். எனக்குப் பதில் கூறு.

திலக:—அன்பரே! நான் நாளை எவ்விதமேனும் தங்களைச் சந்திக்க முயற்சிக்கின்றேன். அவ்வாறு முயற்சித்தும் பயன் கிடைக்காவிடில் நீங்கள் இரவு சரியாக 8 மணிக்குமேல் எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள விநாயகர் கோயிலுக்கு வாருங்கள். உங்களை நான் பார்த்தவளவில் தெரிந்துகொள்வதற்காக காந்தி குல்லாய் அணிந்து கொண்டு வாருங்கள். நான் அதற்குமேல் சமயோசிதம் போலச் செய்கிறேன். கவலைப்படாதீர்கள். நான் சென்று வருகிறேன்—என்று கூறிப் பின்னர் சுகுமாரனளித்த முத்தாரங்களைப் பெற்றுக் கொண்டு அவ் வறையின் மற்றொரு வழியின் மூலம் புறக்கடையை அடைந்து, தோட்டத்தின் வழியாக வீதியை அடைந்தாள்.

திலகவதியின் கால்கள் பயத்தினால் பின்னலிடுகின்றன. நடக்க மாட்டாது அவள் தத்தளிக்கின்றாள். சுகுமாரனுக்கு திலகவதி சென்றுவிட்டதானது கூறவியலாத விசனத்தை உண்டாக்கி விட்டது. எனினும் அதை யுள்ளடக்கிக் கொண்டு தன்னை வந்தவன் இன்னானென்று கண்டுகொள்ளாதிருக்கும் பொருட்டுப் பெரிய முண்டாசு ஒன்று கட்டிக் கொண்டு, சமையல்காரனைப் போல அழுக்கு உடையை உடுத்திக் கொண்டு அங்கு வந்து "யாரப்பா!" என்றான்.

யிருந்தால் பேரம் செய்துப் பின்னர் நாம் சொன்ன தொகைக்கே ஒத்துக் கொள்ள வேண்டி யிருக்குமல்லவா? தாராள புத்தி தர்ம சங்கடத்தையே யுண்டாக்கும் போலும்.

வேலே:—இங்கே திலகவதியம்மா வந்தாங்களே, அவங்க எங்கே? அவங்களே அழைத்துப் போக வந்தேன். எங்கே அவங்க? கூப்பிடுங்க. எத்தனே நேரமா நானு கத்துறேன்.

சுகு:—யாரப்பா அது? இந்த வீட்டிற்கு யாருமே வரவில்லையே! இங்கு ஊட்டுக்கார அம்மாளெ தேடிக்கிட்டு பூக்காரி வந்தா. அவளெ சொல்றியா! அதோ பக்கத்து தெருலே அவ வீடு இக்கிது. நீ அங்கே போய் பாரப்பா! இங்கே நீ சொல்றபடி யாரும் வல்லே.

வேலே:—என்னய்யா இது! நான் கண்ணுலே பாத்தேன். என்னண்டே பொய் சொல்றே. நானு பூக்காரியெ தேடிகிட்டு வரலெ. திலகவதியம்மா! எங்கே பூந்துக்கிணே? வா வெளியிலே.

சுகுமா:—ஏனப்பா கத்துகிருய்! வீட்டுக்காரம்மா வந்தா உன்னேத் திட்டுவார்கள். இங்கு யாருமே வரவில்லே. நீ வேண்டுமானுல் வீடு முற்றும் பார்த்துக் கொண்டு போ!—என்ருன். வேலேக்காரனும் அங்ஙனமே பார்த்து விட்டு "நாம்தான் தப்பிதமாக நினேத்து விட்டோமோ! இந்த வீடுதான் போல விருந்ததே!" என்று தனக்குள் சந்தேகத்துடன் திரும்பி விட்டான்.

அதற்குள் திலகவதி வீடு திரும்பி தன்னுடைய வேலேயைச் செய்து கொண்டிருந்தாள். வேலேக்காரன் தான் கண்ட உண்மையை அங்கச்சியம்மாளிடம் கூறிவிட்டான்.

தூபம் போட்ட உடனே கிளம்பி யாடும் பைசாசத்தைப் போல அவள் இந்த செய்தியைக் கேட்டதும் தத்திக் குதித்துத் தாண்டவ மாடியவாறு "என்ன! என்ன! யார் வீட்டிற்கோ சென்றதைப் பார்த்தாயா! பிறகு அவள் எப்படி காணுது போய் விட்டாள். நீ ஜாக்ரதையாகப் பின் துடர்ந்து சென்ருயா?" என்று அதட்டினுள்.

கஷ்டம் வந்த காலேயில் கடவுளேத் தொழுவதும், வியாதி முற்றியதும் வைத்தியனே நாடுவதும், விவகாரம் முற்றினதும் வக்கீலே யடைவதும், வெள்ளம் வந்த பிறகு அணே கட்டுவதும் யாது பிரயோசனமென்பதைக் கவனியாத அஜாக்கிரதையா யுள்ளவர்களுக்கு என்றும் சுகமில்லே.

ஜெகன்மோகினி அநுபந்தம்.

நீங்கள் ஆவலுடன் ஏழு வருஷக்காலமாய் எதிர்பார்த்த

"ஜெயரங்கன்"

என்னும் ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

வெளிவந்து விட்டது.

இராஜாம்பாள், சந்திரகாந்தா, மோஹன சுந்தரம்,
ஆனந்தகிருஷ்ணன், இராஜேந்திரன்,
வரதராஜம் 1, 2, (பாகங்கள்)

ஆகிய நிகரில்லாத நாவல்களை எழுதிய

J. R. ரங்கராஜு அவர்களால்

எழுதப் பெற்றது.

டெம்மி 370-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் விலை ரூ 1—8—

தபால் செலவு வி. பி. முதலியன பிரத்தியேகம்.

மேற்சொன்ன ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு எழுதிய இராஜாம்பாள் முதலிய நாவல்கள் 25-ம் பதிப்பு வரை வெளி வந்ததே இவைகளுக்குச் சமதையான நாவல்கள் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லை யென்பதை சந்தேகமற நிரூபிக்க வில்லையா?

வேண்டியவர்கள்:—

ஜெகன்மோகினி ஆபீஸ்,
26 தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை,

என்று எழுதி வி.பி. மூலமாய்ப் பெறலாம்.

"ஜெகன்மோகினி" அநுபந்தம்.

இதைவிட

வேறு அத்தாக்ஷி என்ன?

ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு காரால் எழுதப்பெற்ற

			ரூ.	அ.	ப.
"இராஜாம்பாள்"	25-ம்	பதிப்பு விலை	0	12	0
"சந்திரகாந்தா"	15-ம்	,,	0	12	0
"மோஹன சுந்தரம்"	15-ம்	,,	0	12	0
"ஆநந்த கிருஷ்ணன்"	12-ம்	,,	0	12	0
"இராஜேந்திரன்"	11-ம்	,,	1	0	0
"வரதராஜம்" முதல் பாகம்	5-ம்	,,	1	0	0
ஷை இரண்டாம் பாகம்	4-ம்	,,	1	0	0
"விஜயராகவன்"	3-ம்	,,	1	0	0
இப்போது வெளிவந்த "ஜெயரங்கன்"	1-ம்	,,	1	8	0

தபால் கூலி, வி. பி. முதலியன பிரத்தியேகம். தமிழ் பாஷையில் வெளி வந்த நாவல்கள் 25 வது பதிப்பு வரை வெளி வந்ததாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? இத்தனை பதிப்புகள் வெளி வந்ததே இவைகளுக்குச் சமானமான நாவல்கள் தமிழ் பாஷையில் இல்லவே இல்லை என்பதை திட்டமாய் ரூபிக்கவில்லையா? இந்த ஒன்பது நாவல்களில் ஏதாவதொன்றை வாசித்தால் அதன் சுவையே மற்ற 8 நாவல்களையும் வாசிக்கும்படி கட்டாயமாய் தூண்டுமென்பது நிச்சயம்.

இந்த அபூர்வ நாவல்கள் வேண்டுவோர

"ஜெகன் மோகினி" ஆபீஸ்,

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை,

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெறலாம்.

வேலை:—இல்லேயம்மா! நான் எத்தினியோ ஜாக்ரதையாகத் தான் பார்த்தேன். அந்த ஊட்டுக் குள்ளார திலகவதி போகச்சே என்னுடைய கண்ணுலே நான் பாத்தேன். பிறகு அந்த ஊடு பூரா வும் தேடினேன். அந்தம்மாளேக் காணம். இங்கே வேலை செய்யராங் களே, எப்போ வந்தாங்க?

அங்க:—அந்தக் கழுதை எப்போ வந்ததென்று நான் கவ னிக்க வில்லை. அந்த வீடு யாருடையது என்று உனக்குத் தெரியுமா! உன்னேடு பேசியது ஆண்பிள்ளேயா, பெண் பிள்ளேயா!

வேலைக்காரன்:—அது யார் ஊடோ தெரியாது. என்னேடு ஒரு சமையல்காரன்தான் பேசினன். வேறு யாரையுங் காணவில்லை. பொம்பிள்ளைகள் யாருமே இல்லை. எப்படிதான் மாயமாய்ப் பூட் டாங்களோ தெரியல்லை.

அங்க:—மடையா! உன்னிடம் ஒரு காரியத்தை ஒப்புவித்தால் உனக்குத் திறமை இல்லை. நாளை முதல் நீ வீட்டில் எந்த வேலை யைக் கவனிக்கா விடினும் சரி. முதலில் அந்த சிறுக்கியைப் பொருத்த வரையில் கவனித்து எனக்குச் சொல்ல வேண்டியது. இதைத் தவறினல் உன்னை வேலையை விட்டு நீக்குவேன்—என்று உத்தர விட்டாள். வேலைக்காரனும் நடுங்கியவாறு போய் விட்டான்.

அங்கச்சியம்மாள் உள்ளே வந்தாள். இங்கு நடந்த சம்பவங் களை எல்லாம் திலகவதி கவனித்து வந்தாள். ஆதலால், அவள் உள்ளே வருகையிலேயே தனக்கு ஏதோ ஆபத்து காத்திருக்கிற தென்று எண்ணிக் கொண்டாள். அச் சமயம் சாதம் வடித்துக் கொண்டிருந்தாள். அங்கச்சியம்மாள் உள்ளே வந்து "ஏண்டீ! இன்று உனக்கு இத்தனை நேரம் என்ன? எங்கு சென்றிருந்தாய்? உண்மையைக் கூறுகின்றயா, அல்லது உன் விதியின் வேடிக்கை யைப் பார்க்கப் போகின்றயா?" என்றாள்.

எந்தக் காரியத்தையும் ஒரு திட்டம் போட்டுக் கொண்டு செய்யாமல் நினைத்து நினைத்துச் செய்வதால் அனாவசியமான செலவும், கால தாமத மும் ஏற்படுவதென்பதை யறிந்தும் அசிரத்தையாயிருப்பின் பலன் கைமேலுண்டாகின்றது.

திலக:—மாமீ! வழக்கம் போல நேரே வீட்டிற்கே வந்தேன். வேறு எங்கேயும் போகவில்லை. எனக்குப் போவதற்கு வேறு இடமும் உண்டா!

அங்க:—வெகு சாகசமாகத்தான் பேசுகின்றாய்! உனக்கு இடமில்லாமல்தான் அந்த தெருவில் உள்ள வீட்டிற்கு தினம் போகின்றாயோ! ஐயோ பாவம்! உனக்கு வர வர கொழுப்பு மிஞ்சி விட்டது. நீ என்ன செய்வாய்? வீட்டின் வேலையைப் பற்றி அடியோடு மறந்து விட்டாய். அனாதைப் பீடைக்குப் படிப்பு எதற்கு என்று நான் உன்னைக் குப்பையில் தள்ளாமல் படிக்க வைப்பதன் பலன் இதுவோ! அந்த வீட்டில் உனக்கு என்ன வேலை? அதைக் கூறு. அங்கு யார் இருக்கிறார்கள்?

திலக:—அம்மா! எனக்கு எங்கும் யாருமில்லை. நான் எந்த வீட்டிற்கும் செல்லவில்லை. என் பள்ளிக்கூட பாடம் முடிந்ததும் வீடு வருவதொன்றுதான் தெரியும். என்றைக்கேனும் முக்கியமாயிருப்பின் என் (க்ளாஸ் மேட்) பள்ளி மாணவியின் வீட்டிற்குச் சென்று வருவேன். அதுவும் இப்போது எங்கும் போவதில்லை.

அங்க:—என்ன! என்ன! முழு பூசனிக்காயை உள்ளங் கையில் மறைப்பாய் போலிருக்கிறதே! இன்று நீ அங்கு ஒரு வீட்டிற்குச் சென்றதைக் கண்ணால் பார்த்த கந்தன் பேச்சு பொய்யாகி விடுமா! உன்னை—அனாதைப் பிணத்தை—வீட்டில் வைத்துப் பதமாகப் பாதுகாப்பதற்குப் பரிசாக எங்களுக்கு மானக் கேட்டைக்கூட உண்டாக்குவாய்போலிருக்கிறது. உன்னால் அந்த லாபம்தான் எங்களுக்குக் கிடைக்கும். இனி உன்னை வெளியில் அனுப்ப எனக்குப் பிரியமில்லை. நீ நாளை முதல் பள்ளிக்கூடம் போக வேண்டாம்; ஜாக்ரதை—என்றாள்.

யாராயினும் சரி நாம் பக்ஷமான வார்த்தைகளைச் சொல்லி நல்ல எண்ணத்துடன் நடந்து கொள்வதே உத்தமமானது. இக் காலத்தில் அதைச் சிலர் நமது பலஹீனமென்று கருதினாலும் அதனால் முடிவில் நமக்கு அனுகூலமே யுண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

இது கேட்டதே திலகவதிக்கு அடங்காத் துயரமுண்டாகி விட்டது. தன்னுடைய வாழ்நாளில் தான் காணும் இன்பம் கல்வி யொன்றே என்று உறுதியாக எண்ணி இருந்த தனக்கு அந்த ஆநந் தத்திலும் மண் விழுந்துவிடப் போகின்றதே என்ற விசனத்தினல் கண்ணீர் கபகபவென்று வந்துவிட்டது. வெகு வணக்கத்தோடு பேசத்தொடங்கி, "மாமி! வீணாக என்மீது கோபிக்கவேண்டாம். நான் உங்கள் வேலையில் ஒருவிதமான குந்தகமும் செய்யவில்லை. என்னுடைய முதல் கடமையிது என்பதை நான் மறக்கவில்லை. தாங்கள் பெரிய மனது செய்து என்னைப் பள்ளிக்கு அனுப்பவேண் டும்." என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டாள்.

கல்லினும் கொடிய நெஞ்சையுடைய அங்கச்சியம்மாள் அதற் குப் பதில் ஏதும் சொல்லாமல் "சீச்சீ! தடிச்சிறுக்கி! என்னிடம் எதிர்த்துப் பேசுகின்றாயா! அத்தனை தைரியமும் வந்துவிட்டதா! பேசாதே கிட." என்று அட்டகாஸமாய்க் கூறிவிட்டுப் போய்விட் டாள். திலகவதிக்கோ தான் என்ன செய்வது என்கிற பெரும் துக்கம் உண்டாகிவிட்டது. அன்று இரவு தூக்கமே கொள்ள வில்லை. புரண்டு புரண்டு இரவை யோட்டினாள்.

மறுதினம் வழக்கம்போலத் தனது வேலைகள் முடிந்ததும் பாடசாலைக்குப் புறப்பட்டாள். அவள் புறப்படுவதை யறிந்த அங் கச்சியம்மாள் "ஏண்டீ! நேற்று நான் கூறியது உனக்கு லக்ஷியம் இல்லையோ? உன் மனத்தில் உன்னையோர் வேலைக்காரியாக எண்ணி இருக்கிறாயோ, அன்றி பெரிய ஜெமீந்தாரினியாக பாவித்திருக்கி றாயோ! உம். பேசாமலிரு. பெட்டைக் கட்டைக்கு இத்தனை படிப்பு போதும். இனி நீ படித்துப் பெரிய உத்யோகம் பார்க்கப் போகின்றது வேண்டாம். உம். போகக்கூடாது. சமையல் அறை தான் உனக்குப் பாடசாலை. போ உள்ளே." என்று அதட்டினாள்.

வெயிலிலுள்ளவர்களுக்கே அதன் கொடுமை தெரிவது போல கஷ் டப்படுபவர்களுக்கே அதன் கடுமை தெரியுமாதலால் நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் காலத்திலும் நம்மைவிடக் கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்தால் அவர்கள் மனம் குளிர்வதுடன் கடவுளும் நம்மிடத்து கருணை பாவிப்பார்.

திலகவதி எத்தனை கெஞ்சிக் கேட்டும் பயனில்லாது போய் விட்டது. அங்கச்சியம்மாளின் புருஷனும் ஊரிலில்லை. அபலைப் பெண் இனி என் செய்வாள் பாவம். தன் விதியை எண்ணிப் புலம்பியபடியே சமயலறைக்குச் சென்று படுத்துவிட்டாள். அன்னமும் கொள்ளாது அழுத வண்ணம் "இனி எனக்கு விமோசன காலம் ஏது? என்று இக்கஷ்டம் நிவர்த்தியாகும்? ஹா! ஈசா! பேதை என் செய்வேன்?'' என்று கலங்கித் தவிக்கின்றாள். அன்றைய தினமே அவளுக்கு அயோமயமாகத் தோன்றியது. இன்று தன்னை எதிர் நோக்கிக் காத்திருக்கும் சுகுமாரனுக்கு என்னவிதமாக இச்செய்தியை அனுப்புவது என்ற துயரம் ஒரு புறம் பாதிக்கின்றது. பல விதத்திலும் உலுப்பப்பட்டவளாய்ப் பழங் கதைகளை எல்லாம் எண்ணி மனம் தவித்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

இத்தகைய சமயத்தில்தான் எத்தகையோர்க்கும் தமது ஜீவியத்தில் என்னென்ன நடந்தேறியதோ அவைகள் கட்டாயம் நினைவிற்கு வந்தே தீரும். அத்தகைய எண்ணங்களே துயரத்தையும் மாற்றிச் சிறிது சமாதானத்தை அளிக்கும். தற்போது நம் திலகவதியின் துயரம் ஒன்று, இரண்டா? இவைகளுக்கு இடையில் பம்பாயில் தான் இருந்த காலத்து நினைவே அதிகமாக உதிக்கலாயிற்று. பம்பாயில் நடந்த சம்பவங்களை நமது வாசகர்களும் அறிய ஆவல் கொண்டிருப்பார்களாதலால் அதை இங்குக் கூறுவோம்.

அங்கச்சியம்மாளுடைய புருஷனுக்கு பிதிரார்ஜித ஆஸ்தி அதிகம் இல்லை எனினும் ஏதோ சொல்பம் உண்டு. இவர் சாதாரண படிப்பாளிதான். பூர்வ அதிர்ஷ்ட வசத்தினால் உத்யோகம் நன்கு அமைந்தது. மூன்று வருடத்திற்கு ஒரு முறை ஊரைவிட்டு ஊர் மாற்றிக்கொண்டே இருப்பதுதான் இவருடைய வேலை. இவர்களை பம்பாய்க்கு மாற்றிய காலத்தில் அவ்வூர் பாடசாலையில் உபாத்தி

நமது கையில் பணம் நிறைய இல்லாத சமயத்தில் நம்மைக் கடன் கேட்பவருக்குக் கொடுப்பதால் நாம் அப்போது கஷ்டப் படினும் நமது கை வரண்ட சமயத்தில் அவர்கள் அதை திருப்பிக் கொடுத்தால் நமக்குப் பேருதவி செய்த மாதிரி யாகின்றது.

யாயினியாக விருந்த அம்மாளின் வீட்டிற்கே இவர்கள் குடி சென்றார்கள். அப்போது திலகவதி அதற்கு முன்னிருந்த ஊரில் பாடசாலையில் படித்துவந்தாள். அதையே நிறுத்திவிட அங்கச்சியம்மாள் அனேக ப்ரயத்தனங்கள் செய்துவந்தாள். மாற்றலாகி விட்டதே இதற்கனுகூலமென்று எண்ணினாள்.

திலகவதியின் சாமர்த்தியம், புத்தி நுட்பம், சுருசுருப்பு முதலியவைகளைக் கண்டு அந்த உபாத்தியாயினி அவளிடம் ப்ரீதி கொண்டு அங்கச்சியம்மாளின் புருஷனுடன் கூறிச் சிபார்சு செய்து, தன் பாடசாலையில் ஒரு மாணவியாக அமர்த்திக்கொண்டாள். அப்போது அங்கச்சியம்மாள் அரை மனதாக ஒப்புக்கொண்டாள். அவள் புருஷன் சில முக்கிய காரணங்களை முன்னிட்டு இவளைப் பள்ளியில் படிக்கவைத்து வந்தார்.

திலகவதி வெகு உத்சாகத்துடன் தன் வேலைகளைச் செய்வதும் மிகுதி நேரத்தில் பாடங்களைப் படிப்பதுமாக விருந்தாள். இவ்விதம் சில வருடங்களாயின. பம்பாயில் ப்ரபலமான ஸர்கஸ் கம்பெனி ஒன்று வந்து ஆடவாரம்பித்தது. அதற்குப் பாடசாலை மாணவிகளை எல்லாம் உபாத்தியாயினி ஒரு தினம் அழைத்துச் சென்றாள். ஸர்கஸ் கம்பெனிக்காரனுடன் மாணவிகளுக்குப் பிரத்யேகக் கட்டணமும், இடமும் முதலிலேயே பேசித் தீர்மானித்திருந்தபடியால் இவர்களெல்லாம் அந்த பிரத்யேக இடத்தில் வந்தமர்ந்தார்கள்.

கூட்டம் மென்னியை அழுத்துகின்றது. குறித்த நேரத்தில் காட்சி யாரம்பமாகியது: புலி, ஸிம்மம் முதலிய ஜந்துக்களைக் கொண்டு ஆட்டிப் பலவிதமான வேடிக்கைகளைக் காட்டினார்கள். பெரிய மேஜையின்மீது பலவிதமான தின்பண்டங்களை வைத்துவிட்டு பலவித மிருகங்களை ஒன்றாய்ச் சேர்த்து மேஜையைச் சுற்றிலும்

வேலையின் நோட்டம் தெரியாமல் நாம் வேலைக்காரரிடம் பேசி நமது அக்ஞானத்தைக் காண்பித்துக் கொள்வதால் நம்மிடம் அவர்களுக்கு மதிப்பு குறைகின்றது. அதைவிட நாம் எப்பொழுதாவது, மேற் பார்வை செய்தால் அவர்கள் கௌரவம் கொடுத்து வேலையைச் செய்கிறார்கள்.

உட்கார்ந்து சாப்பிடும்படியாகச் செய்த காட்சி எல்லோரையும் பிர மிக்கச் செய்தது. அதில் ராம தூதர்கள் (குரங்குகள்) எதிர்முக மாகவும், அதற்கு நேரே சிறுத்தைக் குட்டிகளும், அதற்குப் பக்கத் தில் அழகிய மான்களும், கரடி, சிம்மம், யானை முதலியவைகளும் அமர்ந்து புசிக்கையில் சிறுத்தை தன் சுபாவப்படி உற் உற் என்று உறும வாரம்பித்தது.

அங்கு வேடிக்கை பார்க்கும் சிறுவர்களில் ஒருவன் விளையாட் டாக ஒரு சிறு கல்லை அந்த மிருகக் கூட்டத்து மத்தியில் எறிந்து விட்டான். அக்கல் மேஜைமேல் நின்றுகொண்டிருந்த சிறுத்தை யின்மீது பட்டுவிட்டது. உடனே சிறுத்தை அசாத்ய கோப மூண்டு, அபார சத்தத்துடன் உறுமியவாறு இடத்தை விட்டுக் குபீ ரென்று பாய்ந்துவிட்டது. இன்னும் மற்ற மிருகங்களும் தாறு மாறுகக் கூக்குரலிட்டுச் சிதற வாரம்பித்தன.

இந்த விபரீதமான சம்பவத்தைக் கண்ட ஜனங்கள் "ஹோ" என்று கதறிப் பதறித் தம் இருப்பிடம் விட்டு எழுந்து இங்கும் அங்கும் ஓடி தத்தளித்துத் தவிக்கின்றுர்கள். குழந்தை குட்டிகள் எல்லாம் குய்யோ முறையோ என்று கத்துகின்றன. ஸர்கஸ் கம் பெனிக்காரர்கள் எல்லாம் நடுநடுங்கி ஒவ்வொரு மிருகத்தையும் இழுத்துக் கட்டுகிறுர்கள். கைக்கு அடங்காமல் ஓர் மான் குட்டி துள்ளித் துள்ளி மனிதர்கள் இருக்கும் இடத்தில் எல்லாம் ஓடுகின் றது. குரங்குகள் குபீர் குபீர் என்று தொத்திக் குதிக்கின்றன.

அச் சிறுத்தை சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓரே பாய்ச் சலாகப் பாய்ந்து மனிதர்களிருக்கு மிடத்தில் வந்துவிட்டது. நாம் முன்பு தெரிவித்தவாறு பாடசாலை உபாத்திமார்களும் மாணவி களும் உட்கார்ந்திருக்கும் தனி இடத்தில் அச்சிறுத்தை பாய்ந்த தும் எல்லோரும் ஏற்கெனவே சின்னபின்னமாகச் சிதறி அலைகை

மனத்தில் துன்பம் அதிகரித்த காலத்தில் தமக்கு எவை இன்பம் என்று தோன்றுகின்றதோ அவ் விஷயங்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தால் துன்பம் சற்று குறைகின்றதாம். பழங் கதைகளின் நினைப்பு ஓர் தனித்த ருசியே தான்.

யில், அச்சிறுத்தை மத்தியில் ஆவேசத்துடன் பாய்ந்து ஓர் உபாத்தியாயினியைக் கீழே தள்ளிவிட்டது. எல்லோரும் பயத்தினல் கலங்கிப்போய் ஒருவர்மேல் ஒருவராக விழுந்தடித்து ஓடுகிறார்கள். நாற்காலி தடுக்கி விழுவோரும், நாற்காலி மனிதர்களின் மேல் விழுவதும், மாணவிகள் கிலியினல் மூர்ச்சையாகி விட்டதும் அல்ல கல்லோலப் படுகின்றது.

கீழே விழுந்த வாத்தியாரம்மாளின் பக்கலில் உட்கார்ந்திருந்த நம் கதா ரத்தினமாகிய திலகவதி 'ஐயோ!' என்று அலறியவாறு வாத்தியாரம்மாளைப் பிடித்துக்கொள்ளப் போகையில் சிறுத்தை திலகவதியையும் கீழே தள்ளி, காலில் நகத்தால் நன்ருகப் புராண்டிய தோடு, மற்றும் சில மாணவிகளைப் புரட்டித் தள்ளி விட்டது.

கொட்டகையில் முற்றும் இன்னதென்று விவரிக்க வியலாத கூச்சலும் "ஐயோ! அம்மா! அப்பா! குழந்தை நசுங்கிவிட்டதே! கால் போய்விட்டதே! கை போய்விட்டதே! ஆபத்து. ஆபத்து!' என்ற கோஷமே அண்டத்தை யளாவுகின்றது. பெரிய வெள்ளம் பொங்கி வருவதுபோல மனிதர்கள் ஓடுகின்றார்கள். ஸர்கஸ்காரர் களும் அலறி நடுநடுங்கி விட்டார்கள். அத்தருணம் அங்கு சாரணர் கூட்டத்தார் வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் கொட்டகையின் சில பாகங்களில் ஓலையைப் பிரித்துவிட்டு ஜனங்களை வெளியேற்றுகின்றார்கள். குழந்தைகளை எல்லாம் அதிகமாக காயம் படவிடாது தூக்கி வெளியில் விடுகிறார்கள்.

பார்க்கும்போதே ஜனங்கள் ப்ரமித்துப் புகழத்தக்க வீராதி வீரனை, சாரண உடை யணிந்துகொண்டுள்ள ஓர் சுந்தர வாலிபன் தனது வீரத்திற்கும் பராக்ரமத்திற்கும் தக்கவாறு வெகு வேகமாகக் கூட்டத்தை விலக்கித் தள்ளிக்கொண்டு சிறுத்தையுள்ள இடத்தில்

சற்றும் எதிர்பாராத சமயத்தில், வெகு நாட்களாகக் கடிதம் கிடைக்காத சிநேகிதர்களிடமிருந்து கடிதம் கிடைத்தால் அது ஒரு தனித்த களிப்பை யளிக்கின்றது. அச் சமயம் ஆதி கதைகள் முற்றும் தானகவே மனத் திரையில் படக் காட்சி போலத் தோன்றுகின்றன.

ஒரே பாய்ச்சலாகத் தன் உயிரை த்ருணமாக எண்ணிப் பாய்ந்து அச்சிறுத்தையின் பின் பாகத்தில் தன் கையிலிருந்த கத்தியினால் இரண்டு மூன்று இடங்களில் பலமாகக் குத்தியதோடு அதன் கழுத்தில் குறி பார்த்து ஒரு குத்து விட்டு, அதைக்கீழே தள்ளி விட்டான். அதே இடத்திலிருந்து அறுத்துக்கொண்டு வந்த குதிரை வெறிகொண்டு தாறுமாறாக ஓடுவதைக் கண்டு வாலிபன் காலரிமேல் ஏறி நின்றுகொண்டு பெரிய துணியை குதிரையின் கழுத்தில் மாட்டி ஒரே இழுப்பாக இழுத்து ஒரு கம்பத்தோடு கட்டி விட்டான்.

இந்த அதி யாச்சரியமான, வீர பராக்ரமத்தைக் கண்ட சர்கஸ்காரனுடைய வியப்பிற்கு ஓர் எல்லையே இல்லை. கீழே சிலருக்குக் காயம் அடைந்து ரத்தம் ஆறாக ஓடுகின்றது. மற்ற மிருகங்களை சர்கஸ்காரர்கள் கூண்டில் அடைத்தார்கள்.

சகுந்தலையின் புதல்வனான பரதன் சிங்கக் குட்டியுடன் விளையாடிய காட்சியை—வீரத்தைக் கதையில் படித்து அகமகிழ்ந்தவர்கள் அங்கு சிறுத்தையைக் கொன்று, குதிரையைக் கட்டிவிட்டு வீரப் பார்வையுடன் நிற்கும் தீர புருடனான சுகுமாரனைப் போற்றிப் புகழாதோர் இல்லை என்றே கூறலாம். சாரணர்கள் தங்கள் கடமைப்படிக்கு அடிபட்டுள்ள ஒவ்வொருவரையும் எடுத்துத் தம்மாலான முதல் சிகித்ஸையைச் செய்வதும், ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதுமாக இருக்கிறார்கள்.

இதற்குள் சர்கஸ்காரர்கள் பலரும் இங்கு ஓடி வந்து சுகுமாரனை மார்புறத் தழுவிக் கொண்டு, கை குலுக்கி அபாரமான நன்றி விசுவாசத்தையும் மதிப்பையும் தமது மனப் பூர்வமாகக் காட்டிப்

'காரியம் இருக்கும் சமயத்தில் மட்டும் சிலரைப் பார்ப்பது. மற்ற சமயம் நினைவே இருப்பதில்லை' என்பது ஒரு பழமொழி. அனேக விஷயங்களில் அவ்வாறு நம்மை யறியாமலேயே நேர்ந்தும் விடுகின்றது. காரிய மற்ற சமயத்தில் ஓய்வு இன்மையினால் யாவும் வேறாகி விடுகின்றன.

பேசத் தொடங்கி, "ஏ! வீரனே! சர்கஸ்காரர்களாகிய நாங்களே புகழ்ந்து போற்றக் கூடிய தைரியமும், சாமர்த்தியமும் உன்னிட மிருப்பதைக் காண எங்கள் உள்ளம் அப்படியே பிரமிக்கின்றது. சாரணக் கூட்டத்திற்கு ஓர் சிகரம் போன்று நீ விளங்குவதை இப் போதே அறிந்தோம். நீ சற்றும் எதிர்பாராமலும் உயிரை மதியாம லும் வீர தீரமாக எங்களுக்கு உதவி செய்ததற்காக நாங்கள் எவ் விதம்தான் பிரதி யுபகாரம் செய்வதென்று தெரியவில்லை. எங்க ளுக்கு இன்று நேர விருந்த பெரிய ஆபத்தை நீக்கிக் காத்த வீர சிங்கமே! இதோ, இந்த பதக்கத்தையும் தங்கக் கத்தியையும் எங்கள் ஞாபகார்த்தமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். நீ செய்த பேருதவிக்கு இது ஒரு பொருட்டல்ல வெனினும் எங்களுடைய கடமையை உத்தேசித்துப் பெற்றுக் கொள்." என்று கூறி தங்கக் கத்தியும், பதக்கமும் அளித்தார்கள்.

சுகுமாரன் அவைகளை வேண்டாமென்று தடுத்தும், அவர்கள் கேளாமல் பலவந்தப் படுத்தியதால் அவற்றைப் பெற்றுக் கொண்டு பதில் வந்தனம் செய்து "ஐயன்மீர்காள்! நான், நீங்கள் கூறும் அத் தனை அரிய மொழிகளுக்குப் பாத்திரமாக மாட்டேன் என்பதை மீண்டும் கூறுகிறேன். என்னுடைய உயிரைப் பற்றி நான் பெரிதாக நினைக்கவில்லை. இது ஓர் ஆச்சரியமும் அல்ல. என்னுடைய ஒரு உயிரை விட அனேக உயிர்களைக் காக்கவேண்டியதே ஒவ்வொரு மானிட ஜன்மத்தின் முக்கிய கடமை என்ற ஓர் தீவிரமான எண் ணத்தைக் கடவுள் எனக்கு அளித்துள்ளார். அந்த எண்ணப்படிக்கு நான் ஏதோ செய்தேன். உங்களுடைய சிறுத்தைக் குட்டி அநி யாயமாய்ப் போய் விட்டதே!" என்றான்.

இதைக் கேட்டதும் சர்கஸ்காரன் நகைத்துக் கொண்டே "பேஷ்! சிறுத்தைக் குட்டியைப் பற்றிக் கவலைப்படும் சமயம் இது வல்லவே! இப்போது ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயுள்ளவர்க

சிலர் தாம் பிறருக்கு அனுகூலம் செய்வதாக எண்ணிச் செய்யும் காரியம் நேர் ப்ரதிகூலமாகி விபரீதத்திற்கு இடமளித்து விடுகின்றது. பிறகு அவர்கள் அனுகூல சத்ருவாகி விடுகிறார்கள்.

ளைப் பற்றியன்றோ கவலைப் படவேண்டும். ஆஸ்பத்திரிக்குச் சென்றவர்களில் யார் யாருக்கு என்ன நேரிடுமோ என்று பயமாக விருக்கிறது. கடவுள் கிருபையால் ஒருவருக்கும் ஒன்றும் இல்லாமலிருக்க வேண்டுகிறேன். உன்னுடைய துணிகரமானச் செய்கையை நாங்கள் என்றும் மறவோம். எங்கள் ஆயுளுள்ள வரையில் உன் வீரத் தன்மையை எண்ணி வியக்காமலிருக்க முடியாது." என்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்து பின்னர் சுகுமாரனுக்குப் பழவகைகள் அளித்துப் புசிக்கச் செய்து அவனை யனுப்பினான்.

சுகுமாரனும் வெகு மரியாதையோடு பேசி உத்தரவு பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தான். நாம் சுகுமாரனைப் பற்றி அதிகம் கூறவேண்டுவதில்லை. ஏற்கெனவே முன்னர் அவனைப் பற்றி நாம் கூறி யுள்ளதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவன் ஓர் பரீக்ஷையின் நிமித்தம் பம்பாய் நகரத்திற்குச் சென்றிருந்தான். குத்து, குஸ்தி முதலிய தேகப் பயிற்சி வேலைகளிலும் அவன் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருந்தான். ஆகையினால், அவனுக்கு தைரியமும், ஓங்கிக் குத்தும் சாமர்த்தியமும் நிறைந்திருந்தது. அன்று தான் செய்த வீரச் செய்கை அவனையே ப்ரமிக்கச் செய்தது.

அன்று நடந்த சம்பவங்களையே எண்ணி அன்று இரவைக் கடத்தினான். மறு தினம் காலையில், தன் வேலைகளை முடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றான். முதல் தினம் அடிபட்டுக் கிடக்கும் மனிதர்களை எல்லாம் எப்படி இருக்கிறதென்று பார்த்துக் கொண்டே வந்தான். உபாத்தியாயினிக்கு நோய் வெகு அதிகமாய் விட்டது. சிறுத்தைக் கடியின் விஷம் தலைக்கேறி விட்டதால் ஜன்னி கண்டு விட்டது. அவளைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடிப் புலம்புகின்றார்கள். காய மடைந்து அங்கு சென்றுள்ளவர்கள் எல்லோருக்கும்

"நாம் மிக்க கவலையுற்று வருந்தும் தருணத்தில் நமக்கு வெகு ஆப்தமானவர்கள், மதிப்புள்ளவர்கள், புத்திமான்கள்" நீ கவலைப் படாதே; தைரியமாயிரு. உனக்கு யாதொரு குறைவுமில்லை" என்று கூறினால் அது மனத்திற்கு அளப்பரிய ஆநந்தத்தையும் தைரியத்தையும் அளிக்கின்றது. எத்தகையோருக்கும் ஆப்தர்கள் அவசியம் தேவை.

தம் தம் சொந்தமான—கனிகரமான—மனிதர்கள் வந்து அருகி லிருந்து கவனிப்பதும்,வீட்டிற்குக் கொண்டு செல்வதும், பணத்தை வாரி இறைத்து வைத்தியம் செய்வதுமாக இருக்கின்றூர்கள்.

எந்த காரியத்திற்கும் பணமல்லவா முதல் காரணமாக இருக் கிறது. எந்த விடத்தில் பார்த்தாலும் பணக்கட்டிருந்தால் ஒரு தினுசு மரியாதை, தனித்த விசாரணை, ப்ரத்யேக சிகித்சை, தடபுடல் உபசாரம் முதலியன நடை பெறுவதை சாதாரணமான குடும்பம் முதல் பெரிய விடங்கள் வரையில் காணலாம். பெருத்த செல்வ வந்தன் வீட்டில் வாழ்க்கைப் பட்ட நாட்டுப் பெண் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவளாயின் அந்தப் பெண்ணுக்கு வியாதி வந்தால் அவளை கவனிப்பதே இல்லை. ஏனோ தானோ என்ற மேல் பூச்சான கவனிப்பே நடக்கின்றது. அதே வீட்டில் வாழ்க்கைப் பட்டுள்ள பெரிய இடத்துப் பெண்ணுக விருப்பின் அவளுக்கு நடக்கும் முறைகள் ப்ரத்யேகந்தான். குடும்பங்களில், சொந்த சம் மந்தப்பட்ட விடத்திலேயே இத்தகைய பக்ஷபாதங்கள் இருக்கை யில் ஆஸ்பத்திரி முதலிய பொது விடங்களில் கேட்க வேண்டுமா! ஆஸ்பத்திரியின் நோக்கம் தருமத்திற்குச் செய்யவேண்டியது. பாரா பக்ஷம் கிடையாது; எல்லோரும் சமம் என்பது இருப்பினும் முக்ய மான வெள்ளையப்பன் புகுந்த விடத்தில்தான் சரியானபடி நடக் கின்றது. வேலை செய்யும் கூலி யாட்கள் முதல் தாதி வரையில் கை நீட்டாதோரும், பெற்றுக் கொள்ளாதோரும் இல்லை என்றே கூறலாம்.

வயிற்றில் பிறந்த பெண்கள் இருவரில் ஒருத்தி செல்வச் சீமாட்டியாயும், மற்றொருத்தி தரித்திரப் பெருமாட்டியாயும் இருந் தால் பெற்றோர்களே ஏழை மகளை அனுதரித்து விடுகிறூர்கள். இது கண் கூடாகப் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கும் விஷயமாகும். உலக

'எல்லாம் நடக்க வேண்டியபடிதான் நடக்கும்' என்கிற நம்பிக்கை யுடன் சகல விஷயங்களிலும் மௌனமாகவும், சாந்தமாகவு மிருந்தால் இக் காலத்தில் பிரயோசனமில்லை. அவரவர்களுக்குத் தக்கபடி முடுக்குட னும், அதிகாரத்துடனும், கண்டிப்பாகவும் நடந்தால்தான் இடைஞ் சல்கள் குறையும்.

வியல் இங்ஙனமிருக்க பணமும் அற்று, மனிதக் கட்டுப்பாடும் அற்று, ஏன் என்று கேட்பாரில்லாத அனுதைப் பிணம் போலக் கிடக்கும் நமது அருங் குண பூஷணியாகிய திலகவதியைக் குறித் துக் கேட்க வேண்டுமா! காலில் பட்ட காயத்தின் வேகம் தாங்காது 'ஹா! ஹா!' என்று பறந்து தவிக்கின்ருள்.

ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்த மனிதர்களது வீடுகளின் விலாசத்தைத் தெரிந்து கொண்டு எல்லோரிடமும் விஷயத்தைச் சொல்லிய நிமிடமே எல்லோரும் அலறி யடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். தம் தம் மக்களின் நிலைமையைக் கண்டு கதறினுர்கள். அந்தோ! பரதேசியான திலகவதியின் வீட்டிலும் இவ் விஷயத் தைத் தெரிவித்தார்கள். பத்திரகாளிக்கு ஒப்பாகிய அங்கச்சியம் மாள் இம் மொழிகளைக் கேட்டதும் சற்றும் இரக்கமற்ற, கல்லினும் கொடிய நெஞ்சுடன் "ஓஹோ! அந்தப் பெண்ணுக்கு நாங்கள் சொந்தக்காரர்கள் இல்லை. அது எங்கள் வீட்டு வேலைக்காரப் பெண்தான். அவளுக்குக் குணமானல் வீட்டிற்கு வரட்டும். இல்லை யேல் அப்படியே வாரிப் போட்டு விடுங்கள். வீட்டு வேலைக்காரக் கழுதைக்காக வேண்டி நாங்கள் வருவோமா!'' என்று கூறிவிட்டாள்.

வெறுமனேயே அதிகாரம் செய்யும் நர்ஸ்களுக்கு இளப்பம் கண்டால் கேட்க வேண்டுமா! திலகவதியை சரியானபடி கவனித் துக் கொள்ளாது ஏதோ ஒரு மருந்தைக் கட்டி ஒரு பக்கம் படுக்க வைத்து விட்டார்கள். அம் மடமயிலாள் தன்னுடைய பாதை தாங்காது, 'அம்மா! அப்பா!' என்று அலற்றுகையில், அருகிலுள்ள தாதிகள் சிள்ளெனச் சீறி விழுந்து "சீ; பேசாதே கிட. சும்மா கத்துகிருயா? பக்கத்தில் உள்ள நோயாளிகளுக்குத் தலைவேதனை யாகிறது. அவர்களுக்கு உடம்பு அதிரும். உம். கத்தாதே! சனியன். ஒரு தரம் சொன்னல் புத்தி இல்லை! உனக்குத் தான் மகா நோவு உண்டாகி விட்டதோ!'' என்று திட்டுகின்ருர்கள்.

பிச்சைக்கு வருவோரிடத்தில் வாய் கொடுப்பதே பிசகு. கொடுத்து விட்டாலோ, அவர்கள் நம்மிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அரிசி, புளி, பருப்பு, துணி முதலியவற்றைக் கறக்காமல் போவதில்லை. பிடி யரிசியைப் போட்டு முதலிலேயே துரத்தி விடுவதுதான் உத்தமம்.

சாந்த குணவதியான திலகம் இந்த புண்ணில் கோலிடுவது போன்ற வார்த்தையைக் கேட்டு மிக்க மனம் நொந்து "ஐயோ! அந்த சிறுத்தைக் குட்டி நம்மைக் கொன்று தன் பசியைத் தீர்த்துக் கொண்டிருக்கலாகாதா! இத்தகைய வேதனையையும் சிறுமையையும் அடைய வைத்துவிட்டாயே கடவுளே! என் பாவத்தின் கோலத்தில் இதுவும் ஒன்று! ஹா! ஹ்ருதய கமலவாஸா! இந்த பாதையைச் சகிக்கக் கூடவில்லையே! என்செய்வேன்? என்னுடைய காலக் கொடுமையின் பயன் இந்த தாதிகளிடத்திலும் நான் திட்டு வாங்க வேண்டி இருந்ததா! கடவுளின் ச்ருஷ்டியில் எல்லோரும் சமம் என்பது ஒருபுற மிருக்கட்டும். அதில் பணத்தின் நிமித்தம் பகையும் வித்யாசமும் உண்டாகின்றன. தற்போது நான் ஒரு வீட்டு வேலைக்காரி. இவர்கள் இந்த வைத்தியசாலையின் வேலைக்காரிகள். தொழில் முறையில் இருவரும் ஒன்றல்லவா! அங்ஙனமிருந்தும் என் விதி இவ்விதமாகவா அமையவேண்டும்? ஹா! ஈசனே! இதுவும் உன் திரு விளையாடலா! இந்த வலியைத் தாங்க முடியவில்லையே! ஹா! க்ருஷ்ணா! த்வாரகாவாஸா!" என்று தனக்குள்ளும், வாய்விட்டும் அலற்றிக்கொண்டே புரளுகின்றாள். அருகில் ஒரு மேஜைமீது சிறிது ரொட்டித்துண்டமும், சாக்கடைத்தண்ணீருக்கு ஒப்பான காப்பி ஒரு கோப்பையிலும் வைத்திருந்தன.

நமது வீரபுருஷன் எல்லோரையும் பார்த்துக்கொண்டே வருவதுபோல இங்கும் வந்தான். மற்றவர்களுக்கு அருகில் கனிகரமானவர்கள் இருப்பதும், தாதிமார் கவனிப்பதும் ப்ரத்யேகமான தடபுடலாக விருந்ததற்கு நேர்மாறாக இவ்வனுதைச் சிறுமி படுத்திருக்கும் பரிதாபத்தைக் கண்டும்,நர்ஸ்களின் அலக்ஷ்யமான மொழிகளைக் கேட்டும் சுகுமாரன் மனம் தவித்தான். "ஆகா! என்ன அனியாயம்! இங்கு நடத்தும் மாதிரியிலிருந்து இவர்களுடைய நடத்தையும் பணப் பேராசையும் தெரியவில்லையா! சிச்சீ! வலி என்பது எல்லோ

'ஜோஸ்யம் தெரியும்' என்று கூறிக்கொண்டு வரும் பிச்சைக்காரர்களுக்கு எதிரில் ஆள்களே முதலில் தென்படக் கூடாது. தென்பட்டால் 'ரேகை பார்க்கிறேன்' என்று ஆசை காட்டி மேன்மேலும் ஏறுகிறார்கள். அத்தகையோருக்கு பிச்சையே போடாது விடினும் நன்மையே!

ருக்கும் ஒன்றல்லவா! இதற்காக இத்தாதிகள் துச்சமாயும் அலக்ஷ்ய மாயும் வார்த்தை சொல்வது என்ன நியாயம்! இச்சிறுமிக்கு ஒருவரும் திக்கில்லையா! இவளை ஏன் என்று கேட்போர் கிடையாதா! ஐயோ, பாவம்! நாமும் சுமார் 5 நிமிட நேரமாக நின்று கவனிக்கின்றோம். அந்த தாதிகளின் பராமரிப்பும், இப்பேதைப் பெண்ணின் பொறுமைக் குணமும் ஆச்சரியமாயிருக்கின்றதே! வலி தாங்காது கண்ணீர் பெருகுகின்றது. அதைத் துடைத்துக்கொண்டு இடையிடையில் அவள் கையைக் குவிப்பதைப் பார்த்தால் கடவுளைப் பிரார்த்தித்துத் தொழுவது நன்கு விளங்குகின்றது. ஐயோ! இந்த அனாதைச் சிறுமி யார் என்று அறிவோம்?'' என்று எண்ணியவாறு மெல்ல திலகவதியின் அருகில் சென்றான். தன் பிறவியை எண்ணி, மனம் புண்ணாகி, தத்தளித்துத் தேம்பித்தேம்பிக் கண்ணீர் பெருகப் படுத்திருந்த திலகவதியைக் கண்ட சுகுமாரன் 5 நிமிடம் அப்படியே நின்றான். பிறகு "அம்மா! உன் கால் வலி எவ்விதமிருக்கிறது? பாதை மிக்க அதிகமாயுள்ளதா?'' என்று கேட்டான்.

தன்னை நோக்கியும் விசாரிப்பதற்கு இவ்வுலகில் மனிதர்கள் யார் இருக்கிறார்கள், என்ற நினைவே அவள் மனத்திலிருந்ததால் சுகுமாரன் கேட்ட கேள்வி திலகவதிக்குத் தாங்கவியலாத திகைப்பும் ப்ரமிப்பு முண்டாக்கிவிட்டது. அவள் மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "வலி அப்படியேதானிருக்கிறது. இதற்குள் குணமாகி விடுமா?'' என்றாள்.

சுகுமா:—அம்மா! உங்கள் பொறுமையைக் காண எனக்கு மிகவும் வியப்பாக விருக்கிறது. காலில் ரணம் அதிகமாக விருக்கும் போலத் தோன்றுகின்றது. உங்களுடைய சொந்த மனிதர்களுக்கு விஷயம் தெரியாதா! யாரும் வரவில்லையா!

திலக:—ஐயா! எனக்குச் சொந்த மனிதர்கள் அரூபியாக

'இன்று தபாலில் 5 ரூபாயாவது வராதா?' என்று எதிர் பார்க்கும் தினத்தில் தபால்காரன் அதற்கு நேர் விரோதமாக திரும்பிவிட்ட வி. பி. களைத் தூக்கிக் கொண்டு வருகிறான். வி. பி. யில் அனுப்பும்படிப் பலதரம் எழுதிவிட்டு வி. பி. வந்த உடனே திருப்பி விடும் கனவான்களை அப்

விருப்பதால் நேரில் வருவதற்கு முடியாது. சாக்ஷாத்காரந்தான் எனக்குச் சொந்த மனிதன். அவன் ஆலயத்தில் சிலாரூபமாக இருப்பதால் இப்பேதையருகில் எங்ஙனம் வருதற்கியலும்?

சுகுமா:—(வியப்புடன்) அம்மா! நீ சொல்வதைப் பார்த்தால் உனக்கு ஒருவருமே இல்லைபோலத் தோன்றுகின்றதே! நீ எங்கு, எவ்வாறு, யாரிடத்தில் வசிக்கிறாய்? பெண்மணீ! உன் வரலாற்றை நான் கேட்கிறேன் என்று மனத்தில் வித்யாசமாக நினைக்காதே! உன்னுடைய நிலைமையைப் பார்த்தால் எனக்கு மிகவும் பரிதாபமாக விருக்கின்றது. உனக்கு இவ்வூரில் யாருமில்லையா! அயலூரில் இருக்கிறார்களா! அவ்வாறிருப்பின் கூறினால் நான் தந்தியடித்து வரவழைக்கின்றேன். இந்த ரொட்டித் துண்டம் நீ புசிப்பதற்காக வைத்துள்ளதா!

தன்னைக் குறித்து இத்தகைய ச்ரத்தையோடு விசாரிக்கும் இப்புண்ணியவான் யாரோ! என்று திலகவதி எண்ணியவளாய் அதுபரியந்தம் சுகுமாரனைத் தலை நிமிர்ந்து பாராமலிருந்தவள் அவனை உற்று நோக்கினாள்.

நேற்றைய தினம் அபாரமான பராக்ரமத்தோடு சிறுத்தைக் குட்டியைக் கொன்ற வீர புருஷன் அவனே என்பதை யறிந்ததும், அவள் கேவலம் அனாதையாகிய தன்னை வந்து அவன் விசாரிக்கும் மேன்மைக் குணத்தை எண்ணி வியந்தாள். காலில் உள்ள ரணத்தின் பாதையினால் பேசவும் கூடவில்லை. மெல்ல சமாளித்துக் கொண்டு, "ஐயா! தாங்கள் இப் பேதையின்பால் அன்பு காட்டிப் பேசுவதற்கு நான் என் மனப் பூர்வமான நன்றி யறிதலை, வந்தனத்தைச்செலுத்துகின்றேன். எனக்குத் தெரிந்த வரையில் எனக்கு எந்த ஊரிலும் எங்கும் ஒரு மனிதர் கூட இல்லை. நான் ஓர் அனாதைப் பரதேசி. சாக்ஷாத் ஜகன் மாதாவும், ஜகத் பிதாவும்தான் எனக்குத் தாய் தந்தையர்கள். அவர்களுடைய அடியார்கள்தான் எனக்குச் சுற்றத்

போது எவ்வாறு நினைக்காம லிருக்க முடியும்? பணத்தை நினைத்து எதிர் பார்த்த நாளில் அத்தகையோரின் குணத்தை எண்ணி உட்கார நேருகின்றது.

தார்கள். அவர்களுடைய அருள் ப்ரகாசந்தான் என் வாழ்நாளின் துணை யாகும். கலைவாணியின் லீலா விநோதப் பிரசாதங்களாகிய புத்தகங்களும், சங்கீதமுமே எனக்கு விளையாட்டுத் தோழிகள்'' என்று கூறுகையில் அவளை யறியாது துக்கம் பொங்கி விட்டதால் முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி யழுது விட்டாள்.

இதைக் கேட்ட சுகுமாரனுக்கு அதிக விசனமாகி விட்டது. "ஐயோ, பாவம்! அவளுடைய மர்மம் யாதோ! அதை யறிய நாம் இனி தொந்தரவு செய்யலாகாது. என்ன பக்தி, என்ன சாந்தம்!'' என்று எண்ணியவாறு அசைவற்று நின்றான். திலகவதி முகத்தின் மூடியை எடுக்கவே இல்லை. தேகம் முற்றும் குலுங்கக் குலுங்க புலம்புவதையும் நிறுத்த முடியவில்லை. சுகுமாரனுக்கோ இத்தகைய நிலைமையில் விட்டுச் செல்வதற்கும் மனம் துணியவில்லை. என்ன செய்வதென்று தெரியாது தர்ம சங்கடத்துடன் விழித்தான்.

சுகுமார:—அம்மா! புலம்பாதே; உன் ஜீவியத்தின் மர்மம் யாதோ நான் அறியேன். உன்னை நான் எவ்விதம் சமாதானம் செய்வது? மாதரசே! புலம்பாதே; புலம்பாதே! காலில் உள்ள ரணம் இன்னும் அதிர்ச்சி யடையும். காலையில் ஏதேனும் ஆகாரம் செய்தாயா! காப்பி அப்படியே இருக்கிறதே!''—என்று கேட்டான். திலகவதியின் அயோமயமான நிலைமையில் ஏதும் பதில் கூறவே சாத்யமற்று விட்டதால் அவள் பேசாமலிருந்து விட்டாள்.

சுகுமாரன் சற்று நேரம் நின்று பார்த்தான். அவனுக்கும் மனது கலங்கிவிட்டதால் பேசாமல் போய் விட்டான். திலகவதியின் புலம்பலும், மனத் துயரமும், சாந்தமும், அனுதித் தன்மையுமே சுகுமாரன் கண் முன்பு தோன்றி எண்ணத்தைக் கப்பிக் கொண்டன. மற்ற அடிபட்டவர்களையும் பார்த்து விட்டுப் போய் விட்டான். அன்றைய பத்திரிகையில் சுகுமாரன் செய்த வீரச்

'இக் காரியத்தில் தலையிட வேண்டாம்' என்று பல தரம் கூறினும் சிலர் அதைக் கேட்காது தலையிட்டுத் தாம் கெட்ட பெயரும், திட்டும் வாங்கிக் கொள்வதுடன், பிறருக்கும் கஷ்டத்தை விளைவித்து விடுகிறார்கள்.

செய்கையைப் பற்றியும் அவன் பரிசு பெற்ற விவரத்தைப் பற்றியும் பிரமாதமாக வந்து விட்டது. ஊரெங்கும் சுகுமாரனைக் கொண்டாடாதோர் கிடையாது.

சுகுமாரன் காலேஜுக்குச் சென்றான். அங்கும் அவனை மாணவர்களும் உபாத்தியாயர்களும் மிகவும் புகழ்ந்து பேசினார்கள். அன்று மாலையிலும் ஆஸ்பத்திரிக்குச் செல்ல நினைத்தான். ஒருவர் பின்னொருவராக சுகுமாரனை விசாரிப்பதற்கு வந்து விட்டதால் அந்த வேளை மணியாகி விட்டது. ஆஸ்பத்திரிக்குச் செல்லக் கூடாது போய் விட்டது. சுகுமாரன் மனத்தில் திலகவதி கூறிய பக்தி மொழிகளே தோன்றித் தோன்றி மறைந்துகொண் டிருந்தன.

மறுதினம் காலையில் ஆஸ்பத்திரிக்கு வந்தான். அவன் முதல் நாளைப் போலவே நோயாளிகளை எல்லாம் பார்த்துக் கொண்டே திலகவதியின் இருப்பிடம் வந்தான். அங்கு திலகவதியைக் காணவில்லை. யார் யாரோ அந்த வார்டில் படுத்திருந்தது கண்டு வியப்புற்றான். அவ்விடத்திலிருந்த பெண்மணி வீட்டிற்குப் போய் விட்டாளோ! என்று எண்ணி அங்குள்ள தாதியை நோக்கி "அம்மணீ! நேற்று இங்கு படுத்திருந்த பெண் எங்கே! வீட்டிற்குப் போய் விட்டாளா?" என்று கேட்டான்.

அதற்கந்த தாதி அலக்ஷ்யமாயும் துடுக்காயும் "உம். அந்த அனாதைக்கு வீடு எங்கு இருக்கிறது? யார் அதை அழைத்துப் போவதற்குக் கிடக்கிறார்கள். ஒருவருமில்லையாம். எங்கேயோ வேலை செய்யும் பெண்ணாம் அவள். அப்பப்பா! என்ன ஆகாத்யம்! என்ன உபத்திரவம்! இங்குள்ள மற்ற நோயாளிகளுக்கு அவளால் இடைஞ்சல்கள் உண்டாவதோடு, அவள் சத்தமிட்டுக் கத்துவது இவர்களுக்கு நோயை அதிகரிக்கச் செய்துவிட்டதால் அவளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டோம்." என்றாள்.

என்றும் வேலை செய்து கொண்டே இருந்தால் சிரமம் தெரிவதே இல்லை. இடையில் சில தினங்கள் சௌக்யமாக உட்கார்ந்து விட்டுப் பிறகு ஒரு குடம் ஜலம் எடுப்பதும் மலையைத் தூக்குவது போலாய் விடுகிறது. சுகம் தரும் பலன் இது போதும்.

இதுகேட்ட சுகுமாரனுக்கு திடுக்கிட்டது. "அவளது மகா சாந்தம் நிரம்பிய தன்மையை நேற்று பார்த்தோம். அங்ஙனமிருக்க அந்த தாதி கூறுவது முற்றும் பொய்யான விஷயம். எல்லாம் பணந் தான் காரணம் என்பது நன்கு விளங்கிவிட்டது.'' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, திலகவதியை மாற்றியுள்ள இடத்திற்குச் சென்றான்.

அந்தோ! அந்த பரிதாப நிலைமையைக் கண்டு சகிக்கக்கூடுமா! அவ்விடத்தின் வளப்பமோ வர்ணனைக்குற்றது எனலாம். சாதாரணமான பாயின்மீது போர்வைகூட சரியாக இல்லாமல் திலகவதி படுத்திருக்கிறாள். அவ்விடத்திற்குப் பின்புறம் முன்புறம் ஆகிய இரு புறங்களிலும் வெட்டவெளி. ஒருபுறம் கொல்லைப்புறம். வெயில் காய்ந்தாலும், மழை பெய்தாலும் தாராளமாக உள் புகுந்து விடக்கூடிய இடம். அவ்விடத்தில் ஏன் என்று கேட்பாரற்ற திலக வதி ஏற்கெனவேயுள்ள ரணத்தோடு பலமாகப் புலம்பியதால் ஜுரம் அதிகமாகக் கண்டுவிட்டது. ஒரு நிமிடம் நினைவு இருப் பதும் மறு நிமிடம் ஸ்மரணை தப்புவதுமாக திரள்மிரளான நிலைமை யில் திலகவதி கிடக்கும் கண்றாவி வெகு பரிதாபமாக விருந்தது.

இத்தனை அலக்ஷ்யத்திற்கும் ஏழ்மை நிலைமைதான் காரணம் என்றதை நினைக்க சுகுமாரன் மனம் புழுங்கியது. அருகில் சென்று "அம்மா! பெண்மணீ! வலி என்னமாயிருக்கிறது? ஏன் ஏதோ ஒரு வாறு பார்க்கிறாய்! என்ன செய்கிறதம்மா?'' என்று அன்பொழுகக் கேட்டான்.

இதுகேட்ட திலகவதியின் நிலைமை தாறுமாறாக விருப்பதால் சரியான பதில் கூறத் தெரியவில்லை. அவன் முகத்தை உற்றுப் பார்க்கிறாள். கண்ணீர் பெருக்குகின்றாள். "நாராயணனே துணை; சங்கரனே துணை; சர்வலோக சரண்யனே துணை;'' என்று பிதற்று கின்றாள். இந்த துக்ககரமான நிலைமையைக் கண்டு மனம் தவித்த

5 ரூபாய்க்குக் கூட பெறாத ஓர் பொருள் அதன் சொந்தக்காரர் களுக்கு அதுவே 50 ஆயிரம் பெறுமானதாகத் தோன்றுகின்றது. அதன் உபயோகத்தை அறிந்த பிறர் அதை யடித்துக்கொள்ளும் நோக்கத்துடன்

சுகுமாரன் வெகு தைரியத்துடன் வெளியில் வந்தான். அவ்வாஸ்பத்திரியின் முதலாளியான வைத்தியரிடம் சென்று விஷயத்தைக் கூறி அவ்வனுதைப் பெண்ணுக்கு ஒரு வழி செய்யவேண்டும் என்று தீர்மானித்தான்.

ப்ரதம வைத்தியரின் வீட்டிற்கு வந்து பார்த்தான். அவர் அன்றுதான் வெளியூருக்குச் சென்றதாயும் வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் செல்லும் என்றும் தெரியவந்தது. உடனே உதவி வைத்தியரிடம் சென்றான். அவரிடத்தில் இந்த ஆஸ்பத்திரியில் நடக்கும் சகலமான அக்ரமங்களேயும் சொல்லிவிட்டான். "ஆஸ்பத்திரியின் கட்டளேப்படிக்குச் செய்யவேண்டிய தாதிகள், ப்ரத்யேகமான லஞ்சம் வாங்கும் இடம் இது இல்லை என்று தெரிந்தவிடத்தில் இத்தகைய அக்ரமம் செய்வது நீதியா?" என்று பெருத்த ஆக்ரோஷத்துடன் கூறினன்.

இதுகேட்ட வைத்தியரும் உடனே ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தார். இங்குள்ள அனியாயங்கள் சில வைத்தியருக்குத் தெரிந்திருப்பினும் இவ்விதம் நேராக நடக்குமா! என்று அவ்வைத்தியர் முதலில் நம்பவில்லை; அவரை அழைத்துக்கொண்டு சுகுமாரன் திலகவதி படுத்திருந்த இடத்திற்கு வந்தான்.

அச் சமயத்தில் திலகவதி, ஹீன ச்வரத்துடன் "ஐயோ! தாகம் நாக்கை வரட்டுகின்றதே! நெஞ்சுலர்ந்து போகிறதே! தண்ணீர் கொஞ்சம் கொடுக்கலாகாதா! அம்மா! தாயே! தாகம்; தாகம். ஹா! தண்ணீர்; தண்ணீர்!" என்று அலற்றியவாறு புரளுகின்றாள். அதே சமயம் அருகிலிருந்த ஓர் தாதி கடுகடுத்த முகத்துடன் "தெ! பேசாதெ கிட. உன் தொந்தரவு பெரிய எழவா இருக்கிறது; சனியன்! 'தாகம், தாகம்' என்று ப்ராணனே வாங்குகிறாயா! யார் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருப்பார்கள். சும்மா இரு. கத்தினல் உதை விழும். சொந்த மனிதர்கள் வந்து செய்வது போல

அப் பொருளைத் தாழ்த்தியே பேசி அவர்கள் தாமாகவே அதை விலக்கும் படிச் செய்துவிட்டு சமயம் பார்த்து அடித்துக் கொண்டு போய் விடுகிறார்கள். ஏமார்ந்த சோணகிரிகளோ!...—

நினைத்து விட்டாயோ!'' என்று பின்னும் ஏதோ திட்டிக் கொண்டே இருப்பதை இந்த வைத்தியர் பார்த்துக் கொண்டே வந்து விட்டார்.

'இச் சமயம் இங்கு வைத்தியர் வரப் போகிறார்' என்று எந்த தாதியும் நினைக்கவில்லையாதலால் அவரைக் கண்டதும் சர்ப்பத்தை மிதித்தவர்கள் போலாய் விட்டார்கள். இங்கு அலக்ஷ்யமாய்க் கூறிய தாதிக்குக் குலை நடுக்கலுற்றது; தத்தளிக்கின்றாள். வந்த வைத்தியர் இந்த அக்ரமத்தை நேரில் கண்டு அடங்காச் சீற்றம் கொண்டு அந்த தாதியை உடனே வேலையிலிருந்து தள்ளிவிட்ட தோடு இது போன்ற குணமுடைய தாதிகளுக்கு அபராதம் விதித் தார்.

திலகவதியின் நிலைமையைக் கவனித்ததிலிருந்து சரியான மருந்து கூடக் கொடுக்கவில்லை என்பது தெரிந்த வைத்தியர் திலக வதியை வேறு ஸ்பெஷல் வார்டிற்கு மாற்றும்படி சுகுமாரன் கேட் டுக் கொண்டதற்கிணங்கி மாற்றினார். தானே ப்ரத்யேகமாக மருந்து களை ரணத்திற்கு வைத்துக் கட்டியதோடு, ஜுரத்திற்கும் இஞ்செக் ஷன் செய்துப் பின் நல்ல மருந்துகளைக் கொடுத்தார். சுகுமாரன் இந்த அக்ரமத்தைக் கண்டு பிடித்ததற்கு மிக்க சந்தோஷப்பட்டுப் பேசிப் பின் சென்றார்.

சுகுமாரன் திலகவதிக்கு அப்போது நியமித்துள்ள தாதியை நோக்கி, "அம்மா! நீங்கள் இவ்வனாதைச் சிறுமியை நன்றாகக் கவ னித்துக் கொள்ளுங்கள்; நான் அடிக்கடி வருகிறேன்'' என்று கூறிச் சென்று விட்டான். அன்று அவனுக்கு காலேஜுக்குச் சிறிது நேரங்கூட ஆய்விட்டது. காலேஜில் அவனுக்கு இந்த ஆஸ்பத்திரி யின் அனியாயமே மனத்தில் வேலை செய்துகொண்டிருந்தது.

அன்று மாலையிலும் ஆஸ்பத்திரிக்கு வந்தான். திலகவதியை புதிதாக அமைக்கப்பட்ட தாதி வெகு அக்கரையோடு கவனிப்பதை

பணம் சம்பாதிக்க வகை யறிந்தோர்க்கு அவர்கள் கையில் பொம்மை போல ஆடுவதற்கு ஏற்ற மனிதர்களும் சிலர் கிடைத்து விடுகி றார்கள். அவர்களைக் கொண்டே மேற் குறித்தோர் பணம் கறக்கச் சரி யான வழியும் செய்து விடுகிறார்கள்.

யறிந்தான். திலகவதிக்கு ஜ்வர வேகம் அதிகமாக விருந்ததால் அவள் ப்ரக்ஞை தப்பி இருந்தாள். சுகுமாரன் இரு முறை அழைத்தும் பதிலில்லாமையினுல் சற்று நின்று பார்த்து விட்டுப் போய் விட்டான்.

இவ்விதமே சுகுமாரன் ப்ரதி தினமும் இரண்டு வேளைகளி லும் வந்து திலகவதியையும் மற்றையோரையும் பார்த்துச் சென்று வந்தான். இரண்டு மூன்று தினங்கள் சென்றதும் ஜ்வரம் சற்று குணமாயிற்று. அவளுடைய சுய நினைவுடன் அன்று படுத்திருந்தாள். தன்னை மிகவும் கேவலப்படுத்தி வேறு இடத்திற் குத் தூக்கிக்கொண்டு போனது ஒன்றுதான் அவளுக்கு நினைவி லிருந்தது. அன்று தான் தனி அறையில் உயர்ந்த படுக்கையில் படுத்திருப்பதை நோக்கி வியப்புற்ருள். தனக்கு திடீரென்று இந்த மாறுதலை ஏன் செய்தார்கள்? இது யாருடைய காரியமாக விருக்கும் என்று தனக்குள்ளேயே எண்ணினுள். அருகிலுள்ள தாதி மகா நல்லவளாய் தனக்குப் பணிகள் செய்வது அவளுடைய வியப்பை அதிகரிக்கச் செய்தது. அந்த தாதியுடன்கூட வாய் திறந்து பேச பயந்தாள். தான் இருப்பது தனித்த அறையாக விருப்பதால் 'இது ஆஸ்பத்திரிதானு, அன்றி யாருடையதேனும் வீடாகவிருக்குமோ!' என்ற சந்தேகம் ஒரு புறம் தோன்றுகின்றது. எதற்கும் வெளியில் எதையும் காட்டிக்கொள்ளவில்லை.

"அன்று நான் தாங்கமாட்டாது புலம்பிக்கொண்டிருந்த சம யம் பதிலே பேசாமல் இருந்துவிட்டதைப்பற்றி அந்த தீர புருஷர் ஏதேனும் நினைத்துக்கொண்டு கோபித்திருப்பாரோ? என்ன மூடத் தனமாக நடந்துவிட்டோம்! அவருடைய அந்தஸ்து என்ன! வீர தீரம் என்ன! கேவலம் அனுதையாகிய நம்மை அன்போடு விசா ரிக்க வந்தவரை அலக்ஷ்யம் செய்ததுபோல முகத்தை மூடிக்

சோதாப் பயல்களிடத்திலேயே சகவாஸமுள்ள யாரும் உருப் படுவ தில்லை. கடைசியில் அந்த பக்காச் சோதாக்களின் பழக்கத்தினுல் சீர் குலைந்துவிட்ட பிறகுதான் புத்தி வருமோ! அப்போதும் படு குழியில்தான் நினைவு தாவுமோ?

கொண்டு புலம்பிவிட்டோமே! ஐயோ! பிச்சைக்காரிக்குச் சமான மாகிய என் முன்பு அவர் இனி எதற்கு வரப்போகிறார்? அவரை நான் காண நேரிடின் நான் செய்த பிழைக்கு மன்னிப்பு முதலில் பெற்றுக்கொண்டு அவர் காட்டிய அன்பிற்கு வந்தனமளிக்கவேண் டும்.'' என்றெல்லாம் மனத்தில் தானே எண்ணாததும் எண்ணிய படியே படுத்திருந்தாள்.

அப்போது மாலை நேரமாதலால் சிலுசிலுப்பான காற்று வீசு கின்றது. அந்த மாலையின் அழகைக் கண்டு உலகமே குளிர்ந்த முகத் துடன் ஆநந்திப்பதுபோல உத்சாகமே உருக்கொண்டு விளங்குகின் றது. அச்சமயம் நமது இளவல் வழக்கம்போல ஆஸ்பத்திரிக்கு வந்தான் இவன் இங்கு வருவான் என்று திலகவதி சொப்பனத்தி லும் நினைக்கவில்லை யாதலால் அவள் தன்போக்காகப் படுத்துக் கைகுவித்தவண்ணம் கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள்.

சுகுமாரன் அருகில் வந்து சற்று நேரம் மவுனமாக நின்றான். பிறகு மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "அம்மா! பெண்மணி! உனக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கிறது? சற்று குணந் தானா! வலி குறைந்திருக்கிறதா!'' என்று அன்பு ததும்பக் கேட் டான்.

இக் குரலைக் கேட்ட பிறகே திடுக்கிட்டுத் திரும்பிய திலக வதிக்கு அசாத்யமான வியப்புண்டாகிவிட்டது. தான் சற்று முன்பே நினைத்ததற்கு மாறாக அவன் இங்கு வந்துவிட்டது அவ ளுடைய கண்களையே நம்பக்கூடாமல் செய்துவிட்டது. அவள் அலறியவாறு, எழுந்திருக்க முயன்றாள். கால் கட்டு அதற்குத் தடையாகத் தடுத்துவிட்டது. அப்படிப் படுத்தவண்ணம், "ஐயா! நான் தங்கள்பால் பெருத்த அபராதியாகிவிட்டேன். என்னுடைய மூடச் செய்கைக்கு என்னை முதலில் தாங்கள் மன்னிக்கவேண்டும். என்னுடைய மதியீனத்தை நானே உணர்ந்தேன். எனது கரைகா

இருவர் மனஸ்தாபத்தினால் பலருக்குப் பலவிதமான வேடிக்கைகள் ஏற்படுகின்றன. கிளறி விடுவோர் சிலர், கிண்டல் செய்வோர் சிலர், தூண்டிக் கொடுப்போர் சிலர், மத்யஸ்தம் போலப் பேசி ஆழம் பார்ப்போர்

ஞதை துயரத்தில் நான் மூழ்கிவிட்டபடியால் என்னுடைய உணர்வே கலங்கி நான் பதில்கூடப் பேச அசக்தியடைந்துவிட்டேன். இந்த பிழை நான் வேண்டுமென்று செய்ததல்ல. என்னை யறியாது செய்துவிட்டதை மன்னிக்கவேண்டும்.'' என்று சரமாரியாகக் கெஞ்சிப் பேசலானுள்.

சுகுமாரனுக்கு சற்றும் எதிர்பாராத இவ்வார்த்தைகள் வேடிக்கையாகத் தோன்றின. இம்மட்டும் அந்த மாது குணமடைந்து பேசுகின்ருளே என்று சந்தோஷமடைந்தான். ஒரு நாற்காலியில் அமர்ந்து "அம்மா! உன்னுடைய இந்த நிலைமையில் இத்தகைய அனுவசியமான பேச்சுக்கள் வேண்டாம். இதற்கெல்லாம் இது சமயமல்ல. நீ ஒருவித பிழையும் செய்யவில்லை. நான் மன்னிக்கவும் வேண்டியதில்லை. இதைப் பற்றிக் கவலைப்படாதே. உனது தேக ஸ்திதி இப்போது எப்படி இருக்கிறது?'' என்ருன்.

திலகவ:—எனக்கு இப்போது சற்று குணமாயிருக்கிறது! ஜ்வரத்தின் தாபம் தெரியவில்லை. கால்வலி மட்டும் அப்படியேதான் இருக்கிறது. இவ்வனுதையின்மீது அன்பு கொண்டுள்ள புண்ணிய மூர்த்தியாகிய தாங்கள் யாரோ, எந்த ஊரோ, என்ன பேரோ! ஒன்றும் தெரியவில்லை.

சுகுமா:—அம்மணீ! இத்தனை பெரிய தோத்திரங்கள் யாவும் வேண்டாம். நானும் உன்னைப்போன்ற ஓர் மனிதனேதான். தற்போது நானிருப்பது இவ்வூர்தான்...சரி. அதிருக்கட்டும். நான் வரும்போது வைத்தியரைக் கேட்டுக்கொண்டு வந்தேன். சாத்துக்குடி பழத்தின் ரஸம் கொடுக்கலாம் என்று கூறினர். உன்னைப் பார்த்தால் மிகவும் களைப்பாயிருக்கிருய்! இதைக் கொஞ்சம் சாப்பிட்டுப் பின்பு பேசலாம்.—என்று கூறியபடி தான் தயாராகக் கொண்டுவந்திருந்த சாத்துக்குடி ரஸத்தைக் கொடுத்தான்.

சிலர், இதுவே சமயம் என்று வீட்டு விவகாரங்களை அறிய வருவோர் சிலர், ஒருவரைப் பற்றி ஒருவரிடம் கோள் சொல்லுவோர் சிலர். அடேயப்பா! இதுபோன்ற லீலைகள் அநந்தம் காணலாம்.

நமது குணபூஷணத்திற்கு அதை வாங்கிப் பருக மிக்க சங்கோஜமும், தன்னுடைய நிலைமையை எண்ணித் துக்கமும் ஒன்று கூடியதால் சாப்பிட மயங்கி அப்படியே வைத்துக்கொண்டு, "ஐயா! சாத்துக்குடி பழத்தின் தோலையும் தீண்ட அருகமற்ற எனக்கு ரஸத்தைப் பருக யோக்யதை யுண்டா! இது எனக்குத் தகாத பானமாகும். நான் கஞ்சி சாப்பிட்டு அரைமணி நேரந்தான் ஆகின்றது. ஆதலால் இப்போது வேண்டாம். தயவுசெய்து மன்னித்து விடுங்கள்" என்றாள்.

சுகுமா:—அம்மணி! நீ இவ்விதம் வித்யாசமாகப் பேசக்கூடாது. பழத்தின் ரஸம் சாப்பிடுதற்கு யோக்யதை உண்டு; இல்லை என்பதை நீ நினைப்பது பிசகு. கடவுள் ஒருவர்தான் எனக்குத் துணை என்று நேற்று நீயே கூறவில்லையா! அக்கடவுளின் விளையாடலில் எல்லா மனிதர்களும் சமமேயன்றி வித்யாசம் கிடையாது. இதனால் நீ இவ்விதம் மறுத்தல் கூடாது." என்று கட்டாயமாகக் கூறியதால் அதை வாங்கி மெல்லப் பருகினாள்.

பிறகு சுகுமாரன் சற்று நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்து விட்டுத் தன்னிருப்பிடம் சென்றான். இவ்விதமே தினம் காலையும் மாலையும் வந்து விசாரித்துக்கொண்டே திலகவதிக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் தன் சொந்த செலவில் வைத்தியரின் மூலமே செய்துவந்தான். பின்னும் 10 தினங்களாயின. இதுபரியந்தம் அங்கச்சியம்மாள் வீட்டிலிருந்து ஒரு காக்காயும் எட்டிப் பார்த்ததில்லை. அங்கச்சியம்மாளின் புருஷன் 20 நாள் வேலையில் சர்க்யூட் போயிருந்ததால் அவருக்கு இவ்விஷயமே தெரியவராது. 'அவள் அப்படியே இறந்துவிடட்டும்' என்றே அங்கச்சியம்மாள் மனப்பூர்வமாய் எண்ணி இருந்தாள். ஆதலால் திலகவதியின் கதிதான் யாதாகியது என்பதை அறவே நினைக்கவில்லை. திலகவதி

கலகக் கொள்ளிகளின் வார்த்தையைக் கேட்டுக் கூத்தாடும் மனிதர்களுக்குத் தன்னை ஆதிமுதல் ஆதரித்துப் பலவித கஷ்டங்களையும் பட்ட மனிதர்களிடத்தில் காட்ட வேண்டிய நன்றி விசுவாசம் கூட மறந்து விடுகின்றது. சிறு துரும்பு வெள்ளத்திற்கு அணையாகுமா! கலகப் பேச்சுக்கள் எக்காலத்திற்கும் உதவுமா! பின்பு தெரியும்.

யின் உபாத்தியாயினியும் 5, 6 நாட்களுக்குள்ளேயே உயிர் நீத்தாள். அச் செய்தியும் நமது மடந்தை யறியமாட்டாள்.

"திலகவதியின் உடம்பு பூர்ண குணமாகிவிட்டது. நாளைய தினம் வீட்டுக்குப் போகலாம்" என்று வைத்தியர் சுகுமாரனிடம் கூறிவிட்டார். சுகுமாரன் இச் செய்தியைக் கேட்டதும் அவனுக்கே தெரியாத ஒருவித புதிய மாறுதல் உண்டாகியது. 'நாளைய தினம் திலகவதி வீட்டிற்குச் சென்றுவிட்டால் அவளைத் தான் இனி எங்கு சந்திக்க முடியும். பார்ப்பதற்கும் நேராதன்றோ!' என்ற ஓர் எண்ணம் உதித்தது. தான் திலகவதியைப் பாராதிருப்பது தனக்கு ஏதோ பெரும் பாரமாக விருக்கும்போலத் தோன்றியது. அவன் மனது அவனையே பல வித கேள்விகளைக் கேட்பதும், இன்னவித மான உணர்ச்சியென்று உணர்ந்துகொள்ளமாட்டாது தத்தளிப்பது மான நிலைமையை அடைந்தது.

தன் மனத்தில் யாது காரணம் பற்றி ஏதோ ஒருவிதமான மாறுதல் உண்டாகி வேலை செய்கின்றதே! இதென்ன விந்தை என்று சுகுமாரன் நினைப்பான். உண்மையை உணரக் கூடவில்லை. எனினும் திலகவதியின் பிம்பத்தை நோக்கவும், அவளது அமுத மொழியைக் கேட்கவும் மனம் தன்னை யறியாது தாவுகின்றது. இதை வெளியிடவும் வெட்கினன். மனந் துணியாது தத்தளித்தான்.

இத்தகைய சங்கடங்களுடன் அன்று மாலை ஆஸ்பத்திரிக்கு வந்தான். அன்று திலகவதி தாராளமாக எழுந்து நடக்கச் சக்தியும், சற்று தெளிவான சுரு சுருப்பும் பெற்றிருந்தாளாதலால் தான் வெகு நாட்களாகச் சீவாது,சிக்காய்க்கிடந்த கூந்தலை வாரி, கருநாகம் நெளிவது போன்ற நீண்ட ஜடை போட்டுத் தொங்க விட்டுக் கொண்டு, வெண்மையான துகில் உடுத்திக் கொண்டு பிறைச் சந்திரன் போன்ற நெற்றியில் சாந்துப் பொட்டு இட்டுக் கொண்டு மெலிந்த தேகத்துடன் ஓர் நாற்காலியில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

சுகுமாரன் வழக்கம்போல அன்று வந்தாலும் மனத்தில் உண்டான மாறுதலால் முகம் பொலிவற்று ஒருவிதமான ஏக்கத்தைக்

காட்டுவதுபோன்ற தோற்றத்துடன் அவ் வறையில் வந்தான். ஜகன்மோகன சிங்கார வடிவமாய் வாணி தேவிக்கு ஒப்பாக வெண் துகிலும், புத்தகமும் பொருத்தமாய் அமையப் பெற்று அமர்ந்துள்ள திலகவதியின் தோற்றம் அன்றைய தினம் சுகுமாரனின் கண்ணிற்கு ஏதோ ஒரு புதிய தேவதையே அங்கு வீற்றிருப்பது போலான புதிய காட்சியைத் தந்தது. அவ் வனிதா ரத்தினத்தின் அழகிய கரத்தைத் தீண்ட அவனது மனம் அவனை யறியாது தாவியது.

அடுத்த வினடி, "சீச்சீ! என்ன துர் எண்ணங் கொண்டோம்!" என்று தன்னையே தான் சமாதானம் செய்து கொண்டு அவளுடைய பேரழகைப் பருகியவாறு, சந்தடி செய்யாமல் ஸ்தம்பம் போல நின்றான். திலகவதி பத்திரிகை படிப்பினும், இடை இடையே பெருமூச்சு விட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

சுகுமா:—மாதரசே! அடிக்கடி பெருமூச்சு விடுவதால் உனக்கு வயிறு உப்பசமாக விருக்கின்றதோ! ஏன் அப்படி மூச்சு வருகின்றது. பல நாட்களாக நான் உன்னைக் கண்டும் உன் பெயரை அறியவில்லை. நான் கேட்டும் நீ சரியானபடி பதில் கூறவில்லை. உன் பெயர் என்ன வென்று சொல்லலாகாதா?

திலகவ:—(திடுக்கிட்டு எழுந்து நின்று,) எப்போது வந்தீர்கள்? வந்த காலடிச் சத்தங் கூடக் கேட்க வில்லையே! உட்காருங்கள். ஏதோ ஒரு பெயர் உள்ளது. எனக்குப் பெயரிட்டு அருமையாக அழைப்பதற்கு யாருமில்லை. நான் ஓர் அனாதையாகையால் எனக்குப் பெயரே கிடையாது. தாங்கள் இத்தகைய சிரமப்பட்டு என்னைக் கவனித்ததற்கு நான் எங்ஙனம் இந்த ருணத்தைத் தீர்க்கப் போகிறேன் என்று நினைத்தால் அதுவே எனக்குப் பெருமூச்சாக வருகிறது; அதுதான் உப்பசம்.

சுகுமா:—என்ன மூடு மந்திரமாய்ப் பேசுகின்றாய்! உனக்குள்ள சமத்காரம் இந்த வார்த்தையிலிருந்தே விளங்குகின்றது. அம்மணீ! வித்யாசமாக எதுவும் நினைக்க வேண்டாம். வைத்தியர் நாளைய தினம் உன்னை வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று கூறி விட்டார்.

இன்று வரையில் உனக்கு சொந்த மனிதர்கள் யாருமில்லை என்றே சொல்லி விட்டாய். நாளைய தினம் நீ எங்கு செல்ல வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. நாளை முதல் உன்னைப் பார்ப்பதற்கும் எனக்குக் கிடைக்காது என்று நினைக்கின்றேன். நீ போக வேண்டிய இடத்தைத் தெரிவித்தால் நான் உன்னைக் கொண்டு விடுகிறேன். நீ வீட்டிற்குச் செல்லும் தினம் நாளைக்கே நெருங்கி விட்டதே என்று எனக்கு வருத்தமாக விருக்கிறது. நீ நாளை சென்ற பிறகு என் நினைவு உனக்கு இருக்குமா!

திலக:—ஆகா! என்னை நாளைக்குப் போகலாம் என்று சொல்லி விட்டாரா! இதைப்பற்றி நானுகவே கேட்க வேண்டுமென்று நினைத்தேன். தங்களைப் பற்றி நினைவிருக்குமா என்று கேட்கிறீர்கள். இதற்கு விடை கொடுக்க நான் சக்தியற்றவளாக விருக்கின்றேன். இவ்வனுதையின்பால் தாங்கள் காட்டிய பேரன்பிற்கு—உதவிக்கு—நான் எந்த ஜன்மாவில்தான் ஈடு செய்யப் போகின்றேனே என்கிற எண்ணம் என் மனத்தைப் புண்புடச் செய்கின்றது. சில தினங்களாக இரவு பகல் என் இதயத்தைப் பிளக்கின்றது. ஸ்பெஷல் வார்டில் படுக்கச் செய்து உபசரித்த சகல ஏற்பாடுகளும் தாங்கள் தான் செய்தீர்கள் என்பதை தாதி மூலம் அறிந்தேன்.

சுகு:—(இடைமறுத்து) சரி; சரி. அது கிடக்கட்டும். மனிதர்களுக்கு மனிதர் உதவி செய்யாது மிருகமா செய்யும். இன்னும் கேட்டால் மிருகங்கள்கூட எத்தனையோ விதத்தில் உதவி செய்கின்றன. இதென்ன ஓர் ப்ரமாதம்! நீ இருக்கும் இடம் எது. அதை நான் அறியலாகுமா! நாளை நான் உன்னைக் கொண்டு விடலாமா?

திலகவ:—ஐயா! என் மீது கோபித்துக் கொள்ளலாகாது. நான் சாதாரண மனிதர்கள் வசிக்கும் வீட்டில் இல்லை. புலி, சிம்மம் முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கும் காட்டில் இருக்கின்றேன். அக் காட்டில் செல்வதற்கும் வசிப்பதற்கும் என் போன்ற பாபாத்மாவுக்குத் தான் சரியானது. தங்கள் போன்றவர்கள் பிரவேசிக்கலாகாது. நாளை நானே போய் விடுகிறேன். என் விஷயத்தைப் பற்றி இன்னும் கூற நான் அசக்தையா யிருக்கிறேன். தயவு செய்து

அதைப் பற்றிக் கேளாமலிருக்க வேண்டுகிறேன். தங்களுடைய உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். இது சத்தியம்.

சுகுமா:—பெண்மணீ! நீ இஷ்டப்படாத உன் விஷயத்தை பலாத்காரமாக அறிய நான் பிரியப் படவில்லை. உன் வார்த்தையிலிருந்து உன் இருப்பிடத்திற்கு நான் வரலாகாதென்று தெரிகின்றது. நான் அனுவசியமாய் வந்து உனக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். உன்னை வேறு எந்த இடத்திலாவது அகஸ்மாத்தாகச் சந்தித்தால் அப்போது உன்னிடம் பேசலாமா! அதற்கும் ஏதேனும் நிர்ப்பந்தங்கள் உண்டா! நான் இவ்விதம் கேட்பது உனக்கு வித்தியாசமாகத் தோன்ற வேண்டாம். நான் என் மனத்தில் உனக்குக் கெடுதி செய்யக் கனவிலும் கருதமாட்டேன்; நீ தாராளமாய் யோசித்துப் பதில் கூறு.

திலக:—ஐயோ! அப்படிக்கு நான் நினைத்தால் எனக்குக் கண் தெரியுமா! தாங்கள் மகா புத்திமானாகையினால் நான் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. நாம் தனிப்பட எங்கேனும் சந்திக்க நேரிடின் நானே எனது வந்தனத்தைத் தமக்குச் செலுத்தாது போவேனா!

சுகு:—அறிந்தேன். உன் பெயரை நான் மீண்டும் கேட்கிறேன். அதைத் தெரிவிக்கலாகாதா?

திலக:—(சற்று யோசித்துப் பிறகு,) ஆகா! இதற்கென்ன. என் பெயர் கஸ்தூரிபாய். இம்மட்டுமே நான் கூறுவேன். இதற்கு மேல் எதுவும் தயவு செய்து கேட்க வேண்டாம்......உங்களுக்கு உடம்புக் கொன்றுமில்லையே! முகம் ஏதோ ஒருவாறு காணப் படுகின்றதே ஏன்?

சுகு:—எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. எனக்கே காரணம் தெரியாது. ஏதோ ஒரு மாதிரியான தோற்றம் உண்டாயிருப்பதை நானும் அறிகிறேன். எனக்கு இன்ன உடம்பு என்று தெரியவில்லை...ஆ! இதற்குள் மணி 7 அடித்து விட்டதே! நான் இங்கு வந்து இரண்டு மணி நேரமா ஆய் விட்டது!

திலக:—ஒருவராலும் கண்டு பிடிக்கக் கூடாதது மனிதர்களின் எண்ணங்கள். காலச் சக்கரம் முதலியவைகளே நிலை தடுமாறி ஓடுகின்றன. இக் கடியாரம் மனிதனே செய்யும் யந்திரமல்லவா! இப்பொழுது நிறுத்திவிடின் நின்றுவிடக் கூடியதல்லவா! இதற்கென்ன வியப்பு?

சுகுமா:—கஸ்தூரி பாய்! நான் சென்று வருகிறேன். நாளை நான் வந்து வண்டி யமர்த்தி யனுப்புகிறேன். போய் வரட்டுமா?—என்றான். அந்த கேள்வி கேட்கும்போது அவன் மனத்திற்குள் ஏதோ ஒரு யந்திரம் புகுந்து கொண்டு வேலை செய்வது போன்ற தோற்றம் உண்டாகியது. அதனுடைய உண்மை என்னவென்று அவனாலேயே அறியக் கூடவில்லை. பிறகு திலகவதியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு சென்றான்.

திலகவதிக்கும் கூறவியலாத மாறுதல் தோன்றி வதைக்கின்றது. பரஸ்பரம் அடித்துள்ள இவ்வன்புச் சாரலின் உண்மை இருவருக்கும் தெரியாத ஓர் மூடுமந்திரமாக விருந்தது. ஏன் இவ்விதம் ஏதோ செய்கின்றதே! இதென்னவென்று விளங்கவில்லையே! என்று தமக்குள் இருவரும் நினைக்கலானார்கள்.

மறு தினம் காலை மணி 8 அடித்தது. இச்சொல்ப தினங்கள் சிறைவாஸத்தினின்றும் விடுபட்டு இருந்ததாக நினைத்திருந்த திலகவதி மீண்டும் சிறைக்குச் செல்லும் தண்டனையைப் பெற்றுவிட்ட கைதியின் மனம் எவ்விதமிருக்குமோ அத்தகைய விசனமடைந்தாள். தன்னை இதுபரியந்தம் ஏன் பாவி என்றும் கேட்காதிருந்த மனிதர்களின் முன்னிலையில் தான் எவ்விதம் செல்வது. சென்றால் என்ன சொல்வார்களோ! எத்தகைய இம்சைகள் இன்னும் மிச்சமிருக்கின்றனவோ! ஐயோ! இந்த ஆபத்து என்னைத் தொலைத்திருந்தால் நான் எவ்வளவு சந்தோஷத்தை யடைந்திருப்பேன்? சீச்சி! என்ன ஜென்மம் எடுத்தேன்!" என்று தனக்குள் எண்ணி கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினாள்.

அதே சமயம் சுகுமாரன் வந்தான். "கஸ்தூரிபாய்! நீ என்னிடம் இடம் சொல்லவில்லையாதலால் நான் ஓர் மோட்டார்

கொண்டுவந்திருக்கிறேன். நீ எங்கு செல்லவேண்டுமோ அங்கு சென்று வண்டியை அனுப்பிவிடு. ஏன் கண்கள் நீரைக் கக்குகின்றன?'' என்று கேட்டவாறு அப்படியே நின்றுவிட்டான்.

திலகவதி கண்ணைத் துடைத்துக்கொண்டு தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டு. "ஐயா! எனக்கு மோட்டார் வண்டியும் வேண்டுமா! வேண்டாம். நான் பஸ்ஸில் அல்லது ட்ராமில் போய் விடுகிறேன். நடந்தே செல்லலாம்; ஆனால் கால் வலியினால் நடக்க முடியாது போலிருக்கிறது. மோட்டார் வேண்டாம்; பஸ்ஸில் ஏற்றிவிடுங்கள். என்னுடைய மனப்பூர்வமான நன்றியறிதலை— வந்தனத்தைச் செலுத்துகின்றேன். என்னை யறியாது செய்துள்ள பிழைகளுக்கு மன்னிக்கக் கோருகிறேன்''. என்று கூறி விழுந்து வணங்கினாள்.

சுகுமாரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஏதோ ஓர் பெரிய ஈடுகாட்ட முடியாத பொருளைப் பறிகொடுத்துவிட்டதுபோலான தோற்றம் உண்டாகிவிட்டது இவ்விதம் உண்டாகக்காரணம் யாதாக இருக்கும் என்றும் அறிந்துகொள்ளக்கூடவில்லை. "கஸ்தூரிபாய்! உன்னிஷ்டத்திற்கு விரோதமாக நான் எதுவும் செய்யவில்லை. மோட்டாரை வேண்டுமாயின் திருப்பியனுப்பிவிடுகிறேன். சரி. போகலாம்.'' என்றதும் திலகவதியும் கிளம்பினாள். தாதிகளிடம் சொல்லிவிட்டு, வைத்தியரிடமும் விடைபெற்றுக்கொண்டாள். திலகவதிக்காக ஸ்பெஷல் வார்டின் கட்டணம், இன்னும் மற்ற செலவுகள் ஆக 50 ரூபாயை சுகுமாரன் கட்டிவிட்டு, இருவரும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தார்கள்.

திலகவதிக்கு வீட்டு வேதனையும் பயமும் நடுக்குகின்றன. கால் சரியானபடிக்கு நடக்கவும் முடியவில்லை. ஏதோ கிலி பிடித்தவள் போல நடக்கலானாள். சுகுமாரன் "அம்மணீ! அதோ அருகிலுள்ள ஹோட்டலில் காலையாகாரம் செய்துகொண்டு போனால் நல்லது. வா; அங்கு செல்வோம்'' என்றான்.

திலகவதியின் நிலைமையில் பசியும் தாகமும் உண்டா! அங்கச்சியம்மாளின் ரூபமன்றோ எதிரில் தோன்றி திடும் திடும் என்று

தூக்கிப்போடுகின்றது. ஆதலால் அவள் "எனக்குப் பசி இல்லை. நேரே நான் வீட்டிற்குப் போகிறேன்; மன்னிக்கவேண்டும். நான் தங்கள் வார்த்தையைத் தட்டுவதாக நினைக்கவேண்டாம். என்னுடைய நிலைமை இப்போது ஆகாரத்தைச் சற்றும் வேண்டவில்லை. பஸ்கள் இருக்கும் இடத்திற்குப் போகலாம்." என்றாள்.

அதற்குமேல் சுகுமாரன் ஏதும் பேசாமல் பஸ்கள் உள்ள விடத்திற்கு அழைத்துச் சென்றான். கூட்டம் நெருக்கமாயிருக்கின்றது. போட்டிமேல் போட்டியாக ஜனங்கள் வந்து தொத்தித் தொத்தி ஏறுகின்றார்கள். இத்தனை கும்பலில் திலகவதியைத் தனித்து அனுப்ப சுகுமாரன் சற்று தியங்கினான். திலகவதியை ஏறச் சொல்லித் தானும் ஏறி அமர்ந்துவிட்டான். திலகவதி "வேண்டாம்" என்று கூற முடியாமல், பேசாதிருந்துவிட்டாள். வண்டியும் புறப்பட்டு விட்டது.

ஆஸ்பத்திரியில் சுமார் 15—20 நாட்களாக சுகுமாரன் திலகவதியுடன் பழகியும், பேசியுமிருந்தும் அவளை அகாரணமாய் ஸ்பரிசித்தவனன்று. அத்தகைய துணிகரமான செய்கையில் ஈடுபட இச்சித்தவனுமல்லன். ஜன நெருக்கடியான வண்டியில் தெய்வச் செயலால் நெருங்கியுட்காரவும், ஒருவர்மீதொருவர் படவும் நேர்ந்து விட்டது. இந்த சம்பவத்தினால் சுகுமாரனின் தேகமே மயிர்க் கூச்செறிந்தது. அவன் என்றும் கண்டறியாத நூதன மாறுதலையடைந்தான். அவனது முகமே வேறுபட்டு விட்டது. இந்த ரகஸியத்தைத் திலகவதி யறியாள். அதே வித மாறுதலைத் திலகவதி யடைந்ததை சுகுமாரன் அறிய மாட்டான். இவ்விதமான வித்யாசத்துடன், ஒருவருடன் ஒருவர் பேசாது செல்கின்றார்கள்.

திலகவதி இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. அவள் வண்டியை நிறுத்தச் செய்து இறங்கி விட்டாள். சுகுமாரனும் இறங்கினான். "நான் சென்று வருகின்றேன். ஞாபக மிருக்கட்டும்." என்று திலகவதி தலை குனிந்து கூறினாள். சுகுமாரனும் 'சரி' என்று தலை யசைத்து விடை கொடுத்தான். திலகவதி மெல்லிய குரலால் பேசத் தொடங்கி "ஐயா! நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது, இதுபரியந்தம் நடந்த எந்த விஷயமும் தாங்கள் யாருடனும் கூறலாகாது. வெளிவருமாயின் எனக்குப் பேராபத்தாய் முடியும். நாம் ஒருவரை ஒருவர் முன் பின்னறியாதவர்களைப் போலவே தாங்கள் நடக்க வேண்டும். இதற்கு உறுதி யளித்தால் போதும்" என்றாள்.

சுகுமாரனும் அவ்வாறே யாகட்டுமெனக் கூறினான். அடுத்த நிமிடம் சாய்ந்தாடும் அழகிய மயில் போலும், அற்புத நடையுடைய அன்ன பக்ஷியைப் போலும் திலகவதி சென்று ஓர் சந்தில் புகுந்து

மறைந்து விட்டாள். அவளுடைய மனம் ஒன்றிரண்டில் அடங்காத பலவித வருத்தங்களினால் குழம்பிக் கிடப்பதால் தன்போக்காக நடந்து தன் வீட்டை யடைந்தாள்.

வீதிப் புறம் கதவு மூடி யிருந்ததைச் சரிவர கவனிக்காமல் இடித்தபடியே உற்று நோக்குகையில் வெளிப்புறம் பூட்டு போட்டிருந்தது. அதோடு (To Let) டு லெட்டு என்ற அட்டை மாட்டப் பட்டிருந்தது கண்டு திடுக்கிட்டாள். வீதிப் புறத்து ஜன்னல் வழியினால் உட்புறம் நோக்கினாள். மனிதர்கள் யாருமே இல்லாமல் வீடு காலி செய்யப் பட்டிருக்தது கண்டு "ஐயோ! இதென்ன விபரீதம்! இவர்கள் இவ் வீட்டில் இல்லைபோல் தோன்றுகின்றதே! வேறு எங்கு சென்று விட்டார்கள். இவர்களிருப்பிடத்தை நாம் எவ்வாறு அறிவது? ஐயோ! கஷ்ட காலமே! விதியே! நீ என்னை இவ்விதமெல்லாம் ஆட்டுவதற்குத் துணிந்துள்ளாயே யன்றி, என்னை ஒரே யடியாக ஒழித்துவிட மாட்டாயா!" என்று கதவினருகிலேயே நின்று கலங்கிப் போய்த் தன் தலைமீது ஏதோ பேரிடி விழுந்து விட்டது போலத் தத்தளித்துக் கண்ணீர் பெருக நின்றாள்.

எந்த இடம் மனித சஞ்சாரமற்றுப் பூட்டப்பட்டுள்ளதோ அவ்விடத்தில் வேலையற்ற சோம்பேறிகளும், கூலி வேலைக்காரர்களும் வம்பளக்கவும் இளைப்பாரவும் வந்து கூடுவது வழக்கமல்லவா! அதுபோன்று அப்போது சில சோம்பேறிகள்—வாயில் பற்ற வைத்த பீடியுடன் சிலரும், புகையிலையை வாய் நிறைய அடக்கிக் கொண்டு சிலரும், புட்டிகளில் கள்ளையும், சாராயத்தையும் வைத்துக் கொண்டு சிலருமாக—திடு திடு என்று அவ் வீட்டில் ஏறித் திண்ணைமீது அட்டகாஸமாய் அமர்ந்து "னானேனெ நானே நானே! தன்னானே தானேனெனே! சாராய சொகுசு புட்டி. தன்னானேனே! கள்ளு மணம் வீசுதண்ணே தில்லாலெலெ! ஜோக்குத்தான் குட்டி ஜோக்குத்தான். போடு தில்லாலெ! போடு நன்னானே!" என்று எல்லோருமாகச் சோதாப்பாட்டுகளைப் பாடிக்கொண்டிருந்ததால் கதவோடு கதவாய் ஒட்டிக்கொண்டு அபாரமான திகிலுடன் நிற்கும் நமது திலகவதிக்கு "ஜோக்குத்தான் குட்டி ஜோக்குத்தான்" என்ற வார்த்தைகள் செவியில் பட்டதும் அவை அவளது உயிரையே உரிஞ்சும் பாணங்கள்போலத் தோன்றின. இனி தான் இவ்விடத்தில் நிற்பது தகாது என்று எண்ணி அவள் அங்கிருந்து கிளம்பி இரண்டடி வைத்தாள். அங்கு இருந்த சோதாக்களில் ஒருவன் "ஏன் குட்டீ! ஏன் போகிறாய்? இதோ பார். ஜோக்கு. ஜில்லு.' என்று கூறிய படியே படிக்கட்டுகளில் இறங்கி குறுக்கே நின்றுவிட்டான். அந்தோ! வலையில் அகப்பட்ட மான் போலத் திலகவதி கதி கலங்கி உணர்வு தடுமாறித் தீயை மிதித்தவள்போல ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

ஒரு அரிய சந்தர்ப்பம்

இனி ஸ்திரீகளும்

இன்ஷியூர் செய்யலாம்

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னைவிட அதிமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா

அஷியூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்.,

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த கம்பெனியின் ஏஜன்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்ற தென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா" கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ. பி. எல்.,
மானேஜிங் டைரேக்டர்.

மகான் அரவிந்தர்

மனைவியாருக்கு எழுதிய கடிதம்

புதுச்சேரியில் தவராஜ யோகியாக விளங்கும் மகான் அரவிந்த கோஷ் சுமார் இருபதாண்டுகளுக்கு முன் தமது மனைவியாருக்கு எழுதிய அரிய கடிதம் இந்நூலில் அடங்கியிருக்கின்றது. இதில் அரவிந்தர் பெருமை, அவரது அற்புத தேசபக்தி, சிறந்த தெய்வபக்தி, மாதர் கடமை யாதியன விளங்கும். சிறந்த காகிதத்தில் பெரிய கொட்டையெழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டணாத் தபால் தலை அனுப்புவோருக்கு ஒரு பிரதி கிடைக்கும்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.



PEN NIBS
GUARANTEED
MADE IN INDIA

Will give every Satisfaction that the best of foreign nibs may give. Our special Quality will last longer than any of its kind in the market.

One trial will thoroughly convince you of their excellent Quality.

Priee *Orient*	Relief	As. 9 per gross.
	Red Ink	As. 12. per gross.

Packing, Postage & other Charges extra.

Liberal terms to merchants.

For further particulars to:

Messrs. SAMSON & CO.,

Triplicane, MADRAS. S, E.

Published by V. M. Parthasarathy Iyengar,
for **" JAGANMOHINI " OFFICE**
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

பத்தாவது ஆண்டுக் கொண்டாட்டம்

50 ரூபாய் பரிசுகள்

முதல் இதழில் தெரிவித்தபடி பிப்ரவரி மாதம் 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின் வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கப்படும்.

முதல் பரிசு ரூ. 15 3-வது பரிசு ரூ. 10
2-வது பரிசு ரூ. 10 ஐந்து ரூபாயில் மூன்று பரிசுகள்

ஏற்கெனவே சந்தா செலுத்தியவர்களும் மேற்கண்ட பரிசுப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமாயின் குறைந்தது ஒரு புதிய சந்தாவைச் சேர்த்தனுப்பவும். ஒரு வருஷ சஞ்சிகை இனாமாக வேண்டுவோர் ஐந்து சந்தா நேயர்களைச் சேர்த்தனுப்பவேண்டும்.

மூன்று வைரங்கள்

சென்ற ஆண்டின் 6-7 இதழ்களில் வெளியிட்ட "கண்ணால் காண்பதனோ!" "மூடக்கோள்கையின் முடிவு", "இன்பமனோகரி" ஆகிய மூன்று சிறு கதைகளை ஒன்று சேர்த்தே மூன்று வைரங்கள் என்று பெயரிட்டு பைண்டு செய்துள்ளோம். நமது சந்தா நேயர்களுக்கு அதன் விலை ஆறணா தான்.

இனிமேல் யாருக்கும் வி. பியில் புத்தகமோ, சஞ்சிகையோ அனுப்பமுடியாது

ஸிலோனுக்கு அனுப்பும் வி. பி களுக்கு ஏற்கெனவேயுள்ள தபாற் செலவுடன் கூட இரண்டணா ஒட்ட வேண்டுமென்கிற புதிய ஏற்பாட்டின்படி வி. பி· யில் புத்தகங்களைப் பெறுவோர்க்கு அதிக செலவுண்டாவதுடன் அனாவசியமான கால தாமதமும் தொந்தரவும் ஏற்படுவதால் இனிமேல் வேண்டிய புத்தகங்களுக்கோ, சஞ்சிகைக்கோ முன்பணமனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். உள் நாட்டுச் சந்தா நேயர்களும் முன்பணமனுப்பிப் புத்தகங்களை வாங்கிக் கொள்ளக் கோருகிறோம்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர்காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலைவலி காயம், தாடைவலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி, கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கில்வாயு, புண், பல்வலி ரணம் முதலியவைகளும், இன்னும் பலவித நோய்களும் வலிகளும்,

"ஜகன்மோகினி" யாய் விளங்கும்

அமிர்தாஞ்சனம்

உங்கள் கைவசமிருந்தால், பறந்து விடும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்

சென்னை ராஜதானிக்கும், மைசூருக்கும் தனி ஏஜண்டுகள் : —

சியாம் & கம்பெனி,

ந. 6. பந்தர் தெரு, சென்னை.